உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

# ஆன்மிகமலர்


ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்



# உலக புகழ் பெற்ற மதுரை சித்திரை திருவிழா சிறப்பிதழ்

aanmeegamalar.com

சித்திரைத் திருவிழாவிற்கு
வருகை தரும் பக்தர்களை
வருக! வருக!! என வரவேற்கிறோம்



அன்புடன் உலக மக்கள் அனைவரும்
ஆனந்தமாக வாழவேண்டும்

# S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

## மரம், ஓடு வியாபாரம் & சாமில்

SAK

## சீனியப்பா குரூப்ஸ்

SAK





எங்களிடம் ஒரிஜினல் (மர்மா), ஆஸ்திரிரேலியாவேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

## சீனியப்பா லாட்ஜ் A/C
## SAK திருமண ஹால்



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,

9842868256



aanmeegamalar.com



# முக்குறுணி விநாயகர் பெயர் எப்படி வந்தது?

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் முக்குறுணி விநாயகர் மிக பிரம்மாண்டமாக காட்சியளிக்கிறார்.

மீனாட்சி அம்மன் சன்னதியிலிருந்து, சுவாமி சன்னதிக்குச் செல்லும் வழியில் 8 அடி உயரத்தில் அருள்பாலிக்கிறார். ஒரு குறுணி என்பது 6 படி. இவ்விநாயகருக்கு 3 குறுணி, அதாவது 18 படி பச்சரிசி மாவால் ஆன கொழுக்கட்டை, விநாயகர் சதுர்த்தி நாளன்று இவ்விநாயகருக்குப் படைக்கப்படுகிறது. எனவே இவ்விநாயகருக்கு முக்குறுணி விநாயகர் என்ற பெயர் நிலைத்துவிட்டது.

மதுரை மன்னரான திருமலை நாயக்கர், வண்டியூரில் தெப்பக்குளம் வெட்டும் போது, கண்டெடுக்கப்பட்ட இவ்விநாயகரை மீனாட்சியம்மன் கோயிலில் வைத்து வழிபட்டனர்.

முக்குறுணி விநாயகர் முன்புள்ள நிலை விளக்குகளில் திருமலை நாயக்கரின் உருவமும், அவரது குடும்பத்தினரின் உருவங்களும் உள்ளன.

# மதுரை பெயரும் அதன் சிறப்புகளும்

2500 வருடங்கள் பழமையான தமிழ் இலக்கிய வரலாற்றிலும், இந்து சமய வரலாற்றிலும் முக்கியத்துவ மானது. மதுரை நகரானது திருவாலவாய், சிவராஜ தானி, பூலோக கயிலாயம், கடம்ப வனம், நான்மாடக் கூடல், சிவ நகரம், துவாதசாந்தத் தலம், சமட்டி வித்தியாபுரம், கன்னியாபுரம் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளது.

மதுரை திருபாற்கடலை கடைந்த போது நாகம் உமிழ்ந்த விஷத்தை இறைவன் அமுதாக மாற்றி மதுரமாக்கினமையால் இத்தலம் மதுரை என்று பெயர் பெற்றதென்பர்.

நான்மாடக்கூடல் மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டு சிவபெருமான் தன் சடையிலிருந்து விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்ததால் நான்மாடக்கூடல் என்ற பெயரும் மதுரைக்கு உண்டு என்கிறார்கள் சிலர்.

ஆலவாய் சிவபெருமானின் அணிகலன்களில் ஒன்றான பாம்பு வட்டமாக தன் வாலை வாயினால் கவ்விக் கொண்டு இத்தலத்தின் எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது என்று ஒரு வரலாறு கூறுகிறது.



aanmeegamalar.com

# காட்டை அழகிய நகராக மாற்ற ஆணையிட்ட சிவபெருமான்
# மதுரை மீனாட்சியம்மன் கோவில் வரலாறு

விருத்திராசூரனை கொன்றமையால் இந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்க கடம்பவனத்தில் இருந்த இந்த சிவலிங்கத்தை பூசித்து தனது தோஷத்தை போக்கிக் கொண்டதாகவும் ஒரு வரலாறு கூறுகிறது.

மதுரை மாநகரத்திற்கு அடையாளமாகவும் அழகு சேர்ப்பதாகவும் அமைந்துள்ள மீனாட்சி அம்மன் கோயில் கோபுரங்கள்.

முதன் முதலில் கடம்பவனக் காட்டில் சுயம்பு லிங்கத்தை கண்டறிந்து முதலில் இந்த கோவிலையும், பின் மதுரை நகரத்தையும் அந்த மன்னன் நிர்மாணித்ததாக வரலாறு என்கிறார்கள் சிலர்.

கடம்பவனமாக இருந்த காட்டை அழித்து அழகிய நகரமாக்கும்படி பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்த குலசேகர பாண்டியனின் கனவில் சிவபெருமான் தோன்றிக் கூறியதால் அம்மன்னன் கடம்பவனக் காட்டை அழித்து மதுரை எனும் அழகிய நகரத்தை உருவாக்கினான். சிவ பெருமான் தன் சடையிலுள்ள சந்திரனின் அமுதத்தைச் சிந்தி புதிய நகருக்கு ஆசி வழங்கினார் என்று வரலாறு கூறுகிறது. இக்கோயில் அம்மனின் 248 சக்தி பீடங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

இத்தலத்தின் மூலவர் சுந்தரேசுவரர். இவர்சுயம்பு மூர்த்தியாவார். இவரை சோமசுந்தரர்,சொக்க லிங்கநாதர்,சொக்கேசர்,ஆலவாய்அண்ணல், சொக்கநாதர் எனவும் அழைக்கின்றனர். இவரை வழிபட்டு இந்திரன் தன்னுடைய பாவத்தினை தீர்த்துக் கொண்டான். அதனால் சுயம்பு லிங்கத்திற்கு கோயில் எழுப்பினான். மூலவர் விமானம், இந்திர விமானம் என்று அழைக்கப்படுகிறது.

அம்பாள் மீனாட்சியம்மனாவார். இவ் விக்கிரகம் மரகதக் கல்லால் ஆனது. அம்பாள் மீனாட்சியின் கருவறையானது 32 சிங்கங்களும், 64 சிவ கணங்களும், 8 கல்யானைகளும் தாங்கி நிற்கும் அபூர்வமானதாகும். இந்த கருவறை விமானத்தை தேவேந்திரன்அமைத் தான். மீன் போன்ற கண்களைப் பெற்றவர் என்பதால் மீனாட்சி என்று பெயர் பெற்றார்.

தன்னுடைய முட்டைகளை மீன் பார்வையாலேயே தன்மய மாக்குவது போல பக்தர்களை அருட் கண்ணால் நோக்கி அருள்பாலிக்கிறவள்.மீனாட்சி யம்மன் திருக்கோலத்தில் கிளியும் இடம்பெற்றுள் ளது. பக்தர்களின் கோரிக்கையை அம்பி கைக்கு நினைவூட்ட திரும்ப திரும்ப கிளி சொல்லிக் கொண்டிருப்பத நம்பிக்கையுள்ளது. இந்திரன் சாபவிமோசனத்திற்காக இத்தலத்தினை தேடி வந்தபோது கிளிகளே சிவவழிபாட்டிற்கு உதவி செய்தன.

இவருக்கு பச்சைதேவி, மரகதவல்லி, தடாதகை, அபிசேகவல்லி, அபிராமவல்லி, கயற்கண்குமாரி,கற்பூர வல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தரவல்லி, பாண்டிப்பிராட்டி, மதுராபுரித் தலைவி, மாணிக்க வல்லி, மும்முலைத்திருவழுதி மகள் போன்ற எண்ணற்றப் பெயர்கள் உள்ளன. மீனாட்சியை அங்கயற்கண்ணி என தமிழில் அழைக்கின்றனர். இவரை தடாதகை பிராட்டி என்றும் அழைப்பதுண்டு. இவர் மதுரையின் அரசியாக இருப்பதால், இவருக்கு நடக்கும் அபிசேகங்களைப் பார்க்க பக்தர்களுக்கு அனுமதி இல்லை. மீனாட்சியம்மனை அலங்காரம் செய்த பிறகே பக்தர்கள் பார்க்க முடியும். இத்தலத்தில் முதல் பூசை அம்பிகை மீனாட்சிக்கே செய்யப்படுகின்றன.

அதன்பின்பே மூலவரான சிவபெருமானுக்கு பூசைகள் செய்யப்படும். இதற்கு மீனாட்சியம்மன்பதிவிரதையாக இருந்து எப்போதுமே தன்னுடைய கணவனுக்கு தொண்டு செய்ய எண்ணியுள்ளார். அதனால் கணவரை எழுப்பும் முன்பே மனைவியான அம்பிகை அபிசேகத்தினை முடித்து தயாராகி றாள். இதனால் காலையில் முதல் பூசை மீனாட்சிக்கு செய்யப்படுகிறது.



மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.இக்கோயில் எட்டு கோபுரங்களையும் இரண்டு விமானங் களையும் உடையது. இங்குள்ள கருவறை விமானங்கள், இந்திர விமானம் என்று அழைக்கப்படுகிறது. 32 சிங்கங்களும், 64 சிவகணங்களும், 8 வெள்ளை யானைகளும் இந்த கருவறை விமானங்களைத் தாங்கு கின்றன.

இத்திருக்கோயில் கிழக்கு மேற்காக 847 அடியும், தெற்கு வடக்காக 792 அடியும் உடையது. இக்கோவிலின் ஆடி வீதிகளில் நான்கு புறமும் ஒன்பது நிலைகளை உடைய நான்கு கோபுரங்கள் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது. வடக்குக் கோபுரம் கி.பி. 1564 முதல் 1572 ஆம் ஆண்டிலும் கட்டப்பெற்று முடிக்கப்பெறாமல், பின்னர் 1878 ஆம் ஆண்டில் தேவகோட்டை நகரத்தார் வயிநாகரம் குடும்பத்தினரால் முடிக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. இக்கோயிலினுள் ஒரு ஏக்கர் பரப்பளவில் பொற் றாமரைக்குளம் அமைக்கப் பட்டுள்ளது.



கைராசியான ஸ்தாபனம்
SINCE 1986
சீத்தாராம்
ஜூவல்லர்ஸ்
தங்கம் ★ வைரம் ★ வெள்ளி
72, தெற்குமாசி வீதி, மதுரை.
போன் : 0452 4374181 | 89251 60864
sitaram-jewellers
sitaramjewellers.srj
www.sitaramjewellers.com
scan here for our location

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கட்டபட்ட ஆண்டுகள் விவரம்!!!

கோவிலும் பொற்றாமரை குளமும் சங்க காலத்திற்கு முன்பே அதாவது 2300 முதல் 3600 ஆண்டுகளுக்கு முன்னரே உருவாக்கப்பட்டது. அதன் பின் வருமாறு.

| | |
|---|---|
| 1168 – 75 | சுவாமி கோபுரம் |
| 1216 – 38 | கிழக்கு ராஜ கோபுரம் |
| 1627 – 28 | அம்மன் சந்நிதி கோபுரம் |
| 1315 – 47 | மேற்கு ரா கோபுரம் |
| 1372 – | சுவாமி சந்நிதி கோபுரம் |
| 1374 – | சுவாமி சந்நிதி வெஸ்ட் கோபுரம் |
| 1452 – | ஆறு கால் மண்டபம் |
| 1526 – 100 | கால் மண்டபம் |
| 1559 – | தெற்கு ராஜ கோபுரம், முக்குறுணி விநாயகர் கோபுரம் |
| 1560 – | சுவாமி சந்நிதி நார்த் கோபுரம் |
| 1562 – | தேரடி மண்டபம் |
| 1563 – | பழைய ஊஞ்சல் மண்டபம், வன்னியடி நட்ராஜர் மண்டபம் |
| 1564 – 72 | வடக்கு ராஜா கோபுரம் |
| 1564 – 72 | வெள்ளி அம்பல மண்டபம் கொலு மண்டபம் |
| 1569 – | சித்ர கோபுரம், ஆயிராங்கால் மண்டபம், 63 நாயன்மார்கள் மண்டபம் |
| 1570 – | அம்மன் சந்நிதி மேற்கு கோபுரம் |
| 1611 – | வீர வசந்தராயர் மண்டபம் |



| | |
|---|---|
| 1613 – | இருட்டு மண்டபம் |
| 1623 – | கிளிக்கூட்டு மண்டபம், புது ஊஞ்சல் மண்டபம் |
| 1623 – 59 | ராயர் கோபுரம், அஷ்டஷக்தி மண்டபம் |
| 1626 – 45 | புது மண்டபம் |
| 1635 – | நகரா மண்டபம் |
| 1645 – | முக்குருணி விநாயகர் |
| 1659 – | பேச்சியக்காள் மண்டபம் |
| 1708 – | மீனாக்ஷி நாயக்கர் மண்டபம் |
| 1975 – | சேர்வைக்காரர் மண்டபம் |

உலகின் அதிசயங்களில் முதலிடத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திகழ வேண்டும் அந்த அளவிற்கு அக்கோயில் அதிசயங்கள் புதைந்துள்ளது.

# 48 ஆண்டாக மூடப்பட்ட சொக்கநாதர் கருவறை அதுவரை அணையாமல் எரிந்த தீபம்

மீனாட்சி அம்மன் கோயிலில் சொக்கநாதர் கருவறை 48 ஆண்டுகளாக மூடப்பட்டு இருந்தது. 1330–ம் ஆண்டு முகலாயர்கள் படையெடுப்பின்போது அம்பாளையும், சுவாமியையும் உடைத்து நொறுக்க முயற்சி நடந்தது.

கோயில் ஸ்தானிகர்கள் கருவறை வாயிலை கற்சுவர் கொண்டு மூடி, கருவறைக்கு முன்பு அர்த்த மண்டபத்தில் வேறொரு சிவலிங்கத்தை அமைத்தனர். அன்னியர்கள் அந்த சிலைதான் சுந்தரேஸ்வரர் என்று நினைத்து அதை சிதைக்க முற்பட்டனர். சுந்தரேஸ்வரர் சன்னதி 48 ஆண்டுகளாக அடைக்கப்பட்டு பூஜை இல்லாமல் இருந்தது.

கம்பண்ணர் என்ற வீரர் அன்னியர்களை வென்று மீண்டும் கருவறையை திறக்க ஏற்பாடு செய்தார். அப்போது 48 ஆண்டுகளுக்கு முன்பு பூசப்பட்ட சந்தனம் நறுமணம் வீசியது. சிவலிங்கத்தின் இருபுறமும் ஏற்றி வைக்கப்பட்ட வெள்ளி விளக்குகள் அணையாமல்



எரிந்துகொண்டு இருந்தது.

சிதைக்கப்பட்ட அந்த சிவலிங்கமும் தற்போது சுவாமி சன்னதியை ஒட்டி, பிரகாரத்தில் உள்ளது. அதன் அருகிலேயே இந்த வரலாறும் இடம் பெற்றுள்ளது.




aanmeegamalar.com

#### மதுரையின் பேரரசி
# ஸ்ரீ மீனாட்சியம்மனின்
## ஆறுவித அற்புத அலங்காரங்கள்

பிள்ளை வரம் தொழில் லாபம் பெற ஒவ்வொரு தரிசனம்

பழனியில் முருகன் காலையில் ஆண்டி கோலத்திலும், மாலையில் இராஜ அலங்காரத்திலும் காட்சி தருவார்.

சோட்டாணிக்கரை பகவதி அம்மன் சரஸ்வதி, லட்சுமி, பார்வதிதேவி என மூன்று விதமாய் காட்சி தருவாள்.

அந்த வரிசையில், மதுரை பேரரசி ஸ்ரீ மீனாட்சி அம்மன் மொத்தம் ஆறு விதமான அலங்காரங்களில் காட்சி அளிக்கின்றாள்.

இது வேறு எந்த கோயிலிலும் இல்லாத சிறப்பாகும். இனி அந்த ஆறு வித ஆராதனைகளைப் பற்றிப் பார்ப்போம்.

காலை 68 நாழிகை வரையில் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரியாகவும்,

மதியம் 121.15 நாழிகை வரையில் கௌரியாகவும்,

மத்தியானத்தில் சியாமளாகவும்,

சாயரட்சையில் மாதங்கியாகவும்,

அர்த்த ஜாமத்தில் பஞ்சதசியாகவும்,

பள்ளியறைக்கு போகையில் ஷோடசியாகவும் அன்னையை உருவகப்படுத்தி ஆராதிக்கப்படுகிறாள்.

அன்னைக்கு ஐந்து கால பூஜைகள் நடக்கும் போது,மேலே சொன்ன ரூபங்களுக்கு ஏற்றவாறு தான் அலங்காரங்கள் செய்விக்கப்படும்.

காலையில் சின்னஞ்சிறு சிறுமி போன்றும்,

உச்சிக்காலத்தில் மடிசார் புடவை கட்டியும்,

மாலை நேரத்தில் தங்க கவசமும், வைரக் கிரீடமும் அணிந்தும்,

இரவு அர்த்த ஜாமத்தில் வெண்பட்டு புடவை அணிந்தும் அன்னை அற்புதமாக காட்சி தருவாள்.

ஒரே நாளில் இந்த அத்தனை ரூபத்தினையும் தரிசிப்பவர்களுக்கும் மறுப்பிறப்பு கிடையாது.

எல்லா கோயில்களையும் போல, மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலிலும் பள்ளியறை அம்மன் சன்னதியில் இருக்கிறது.

இரவு சுந்தரேஸ்வரரது வெள்ளிப் பாதுகைகள் சுவாமி சன்னதியிலிருந்து பள்ளியறைக்கு வரும்.

தொடர்ந்து பாதுகைகள் வந்த பின் அன்னைக்கு விசேஷ ஆரத்தியுடன் மூக்குத்தி தீபாராதனை நடக்கும்.


அதன் பின்னரே அம்பிகையின் சன்னதி மூடப்பட்டு பள்ளியறையில் பூஜை, பால், பழங்கள், பாடல்கள், வாத்ய இசை என்று சகல உபசாரங்களுடன் இரவு கோயில் நடை சார்த்தப்படும்.

கணவன் மனைவி ஒற்றுமைக்கு மதுரை ஸ்ரீமீனாட்சி கோயிலில் தினமும் நடைபெறும் பள்ளியறை பூஜையை தரிசித்தால் நல்ல பயனைக் கொடுக்கும்.

பிள்ளை வரம் வேண்டுவோர் காலையில் ஸ்ரீமீனாட்சி அம்மனின் சிறுபிள்ளை அலங்காரத்துடன் நடக்கும் ஆராதனையை தரிசித்து மனமுருகி வேண்டினால், அன்னை பலன் தருவாள் என்கின்றனர்.

வியாபார நஷ்டத்திற்கு தொழில் மற்றும் வேளையில் பிரச்சனை உள்ளவர்கள் அன்னையின்

வைர கிரீட அலங்காரத்தினை கண்டு தரிசித்தால் முன்னேற்றம் பெறலாம் என சொல்கின்றனர்.





aanmeegamalar.com

# அற்புதங்கள் தரும் யானை மலை நரசிம்மர்



மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 5 கிமீ தொலைவில் அமைந்திருக்கிறது ஒத்தக்கடை. இங்கிருந்து சுமார் ஒரு கிமீ தூரத்தில் உள்ளது. யானை மலை. இங்கே யோக நரசிம்மராக அருள்கிறார் ஸ்வாமி.

ரோமச முனிவர் சிறந்த தவசீலர். பெரும் ஞானி ஆனாலும் பிள்ளை இல்லாத குறை அவரை வாட்டியது. பிள்ளை வரம் கேட்டு இறைவனை வழிபட தீர்மானித்தார். எங்கு சென்றால் மிக எளிதில் இறையருளைப் பெற முடியும் என்று யோசித்தவர் மிக உன்னதமான ஒரு தலத்தை அடைந்தார். அதுதான் யானைமலை. அங்கே சக்கர தீர்த்தத்தில் நீராடி யாகம் தொடங்கினார். மனமுருக வழிபட்டார். அவருக்கு இறையருள் கனிந்தது.

ஒன்று கிடைக்கும் வரை மனம் அதைப் பற்றிக் கொண்டிருக்கும் கிடைத்துவிட்டால் வேறொன்றை விரும்பத் தொடங்கிவிடும். முனிவருக்கும் வேறொரு விருப்பம் முளைத்தது. தன் மனதுக்கினிய பரந்தாமனை நரசிம்மர் கோலத்தில் தரிசிக்க விரும்பினார். அந்த ஆசையும் நிறைவேறியது. ஆக்ரோஷமாக காட்சி தந்தது நரசிம்மர். ஆண்டவனின் ஆக்ரோஷத்தை இந்தப் பூமி தாங்குமா? அல்லாடிப் போனார்கள் இந்திராதி தேவர்கள்.

அவர்களின் குறை தீர்க்க ஓடோடி வந்தாள் மகாலட்சுமி. அவள் முகம் கண்டதும் சினம் தணிந்தது சுவாமிக்கு. திருமகளை மார்பில் இருத்தியபடி செல்வ சுகபோகங்களை வாரி வழங்கும் வள்ளலாய் யோக நரசிம்மராய் யானை மலையில் கோயில் கொண்டார்.

இங்கே கருவறையில் சுமார் 6 அடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் மேற்கு நோக்கி காட்சி தருகிறார் யோக நரசிம்மர். பிரதோஷ நேரத்தில் இங்கு வந்து பானக நைவேத்தியம் செய்து இவரை வழிபட குழந்தைகளின் கல்வி சிறக்கும். வியாபாரம் விருத்தியாகும். சத்ரு தொல்லைகளும் மரண பயமும் நீங்கும். அனைத்திலும் வெற்றி கிட்டும் என்கிறார்கள். தாயாரின் திரு நாமம் நரசிங்கவல்லித்தாயார் இந்த தாயாரை வழிபட திருமணத்தடை நீங்கும்.




# திருக்கோஷ்டியூர் அருள்மிகு சவுமியநாராயண பெருமாள் திருக்கோவில்



வைணவர்களின் புனிதத்தலமான 108 திவ்ய தேசங்களில் ஒன்றான பெரிய கோவிலுக்காகப் பிரசித்தி பெற்றது திருக்கோஷ்டியூர் சவுமிய நாராயண பெருமாள் திருக்கோவில். இத்திருத்தலம் தமிழ்நாட்டில் திருப்பத் தூரிலிருந்து 8 கி.மீ தொலைவில் உள்ளது.

இது பாண்டிய நாட்டுத் திருத்தலங்களின் கீழ் வருகிறது. ஆழ்வார் ராமானுஜர் இங்கு வருகை புரிந்து ஸ்ரீ விஷ்ணுவை வழிபட்டுள்ளார். இத்தலத்தில் சௌமிய நாராயண பெருமாளின் பிரம்மாண்டமான திருஉருவச் சிலை ஐந்து தலை நாகத்துடன் பள்ளி கொண்ட நிலையில் காணப்படுகிறது.

உலக மக்கள் அனைவருக்கும் ஓம் நமோ நாராயணாய என்ற எட்டெழுத்து மந்திரத்தை ராமானுஜர் உபதேசித்தால் திருமந்திரம் விளைந்த திவ்ய தேசம் என்ற பெருமை இதற்குண்டு.

பிரம்மாவிடம் வரம் பெற்ற இரண்யன் எனும் அசுரன் தேவர்களை தொடர்ந்து துன்புறுத்தினான். கலங்கிய தேவர்கள் தங்களை காக்கும்படி மகாவிஷ்ணுவிடம் முறை யிட்டனர். அவர், இரண்ய னை வதம் செய்வது குறித்து ஆலோசனை நடத்த தேவர்களை அழைத்தார். ஆனாலும் பயந்த முனிவர்கள் இரண்யன் தொந்தரவு இல்லாத இடத்தில் ஆலோசிக்க வேண்டும் என்றனர். சுவாமியும் அவர்களது கோரிக்கையை ஏற்றார்.

இதனிடையே இத்தலத்தில்கதம்ப மகரிஷி, விஷ்ணுவின் தரிசனம் வேண்டி தவமிருந்தார். அவர்தான் தவமிருக்குமிடத் தில், எவ்வித தொந்தரவும் இருக்கக்கூடாது என்ற வரம் பெற்றிருந்தார். எனவே தேவர்களுடன் ஆலோசனை செய்வதற்கு இத்தலத்தை தேர்ந்தெடுத்தார் மகா விஷ்ணு. அப்போது நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்யனை அழிக்கப்போவதாக கூறினார் மகாவிஷ்ணு.

மகிழ்ந்த தேவர்களும், கதம்ப மகரிஷியும் அவர் எடுக்கப்போகும் அவதாரத்தை தங்களுக்கு காட்டும்படி வேண்டினர், எனவே, அவதாரம் எடுப்பதற்கு முன்பே இங்கு நரசி ம்ம கோலம் காட்டியருளினார். இதனால் மகிழ்ந்த கதம்ப மகரிஷியும், தேவர்களும் அவரது பிற கோலங்களையும் காட்டியருளும் படி வேண்டினர். சுவாமியும் நின்ற, கிடந்த, இருந்த, நடந்த என நான்கு கோலங்களை காட்டியருளியதோடு, இங்கேயே எழுந்தருளினார். தேவர்களின் திருக்கை (துன்பம்) ஓட்டிய தலம் என்பதால் திருக்கோட்டியூர் என்றும் பெயர் பெற்றது.

பேரழகு கொண்டவர் என்பதால் இங்கிரு க்கும் பெருமா ளுக்கு சவுமியநாராயணர் என்பது திருநாமம். பொதுவாக கோவில்களில் உற்சவர் விக்ரகங்களை பஞ்சலோக த்தால் அமைப்பர். ஆனால், தூய்மையான வெள்ளியால் ஆன விக்ரகம் இங்குள்ளது. இதை தேவலோக இந்திரனே தந்ததாக ஐதீகம்.

மகாவிஷ்ணு இரண்யனை வதம் செய்யும் வரையில், இத்தலத்தில் தங்கியிருந்த இந்திரன், தான் தேவலோகத்தில் பூஜித்த சவுமிய நாராயணரை, கதம்ப மகரிஷிக்கு கொடுத்தார். இந்த மூர்த்தியே இக்கோவில் உற்சவராக இருக்கிறார். இவரது பெயரா லே, இத்தலமும் அழைக்கப்படுகிறது.

பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என ஐந்து ஆழ்வார்கள் மங்களாசா சனம் செய்த தலம் இது. இப்பெருமாளை திருமங்கையாழ்வார் வெள்ளியான் கரியான் மணிவண் ணன் என்று போற்றுகிறார்.

இத்தலத்தின் வடபகுதியை மயன் என்ற அசுரத் தச்ச னும், தென்பகுதியை விஸ்வகர்மா என்ற தேவதச்ச னும் இணைந்து இத்தலத்தில் அஷ்டாங்க விமானம் அமைத் தனர். ‘ஓம்’, ‘நமோ’, ‘நாராயணாய’ எனும் மூன்று பதங் களை உணர்த்தும் விதமாக இந்த விமானம் மூன்று

aanmeegamalar.com





தளங்களாக அமைந்துள்ளது.

சவுமிய நாராயண சுவாமியுடன் ஸ்ரீதேவி, பூதேவி மட்டுமின்றி மது, கைடபர், இந்திரன், புருரூப சக்கரவர்த்தி, கதம்ப மகரிஷி, பிரம்மா, சரஸ்வதி, சாவித்திரி ஆகியோரும் உள்ளனர். அருகில் சந்தான கிருஷ்ணர் தொட்டிலில் இருக்கிறார். இவருக்கு பிரார் த்தனை கண்ணன் என்று பெயர். புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் இவருக்கு விளக்கு ஏற்றி வழிபட்டால், அப்பாக்கியம் கிடைப்பதாக நம்பிக்கை.



கோவிலுக்குள் நுழையும்போது பலிபீடம், துவஜஸ்தம்பத்தைப் பார்க்கும் நாம், பின்னால் நந்தியையும் காணும்போது மெல்லிய வியப்பு மேலிடுவதைத் தவிர்க்க முடியாது. ஆமாம், இங்கே ஒரு சிவ சந்நதி யும் இருக்கிறது.

இந்தத் தலத்தில் இரண்ய வதம் பற்றிய திட்டத்தைத் தீட்டும்போது ஈசனும் அதில் பங்கேற்றதன் சாட்சி! இவரை சரபேஸ்வர லிங்கம் என்று குறிப்பிடுகிறார்கள். தனி சந்நதிக்கு முன்னால் ஈசனைப் பார்த்தபடி நந்தி அமர்ந்திருக்க, சந்நதிக்குள் சிறு உருவில் இந்த லிங்கம் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறது. இவருக்கு முன்னால், சந்நதிக்குள் வேல் தாங்கிய முருகன், சந காதி முனிவர்கள், நாகர் சிலைகளும் காட்சியளிக்கின்றன.

கோவிலினுள் நுழைந்ததுமே இடப்பக்கத்தில் ஸ்ரீராமா னுஜரும், திருக்கோஷ்டியூர் நம்பிகளும் (இவருடன் இவரது திருவாராதன மூர்த்தியான ஸ்ரீராமன்சீதை – லட்சுமணன் அனுமனும்) தனித்தனி சந்நதிகளில் காட்சி தருகிறார்கள்.

இத்தலத்திற்கு வருகை புரிந்த பெரியாழ்வார் இத்தலத் தை பார்த்து பிரமித்துப் போய் நின்றுவிட்டார். அவருக்கு திருக்கோஷ்டியூர், ஆயர்பாடியாகவே தெரிந்தது. அங்கே கண்ணனின் குறும்புத்தனங்களைக் கண்டு மனம் விம்மினார்.

"வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி பிறந்தனில்" என்று பாடி சிறப்பித்தார். அவர் கண்டுகளித்த காட்சிகளில் ஒன்றுதான் இந்த (காளிங்க) நர்த்தன கண்ணன் வடிவம்.

இந்த திவ்ய தேசத்தில் எம்பெருமான் நின்றும், கிடந்தும், அமர்ந்தும், நடந்தும் தனது பல வகை திவ்ய சொரூபங்களைக் காட்டி நம்மை மகிழ்விக்கிறார். இந்த நர்த்தன கிருஷ்ணன் உருவம் நடந்த திருக்கோலத்தைக் காட்டுகிறது.

கோபுரத்தின் இந்த உச்சி யிலிருந்துதான் ராமானுஜர் உலகோர் அனைவரும் உய்வடைய அஷ்டாக்ஷர மந்திரத்தையும், அதன் பொருளையும், அதன் பலனையும் பகிரங்கமாக அறி வித்தார். ஊரைப் பார்த்தவண்ணம் அவரது திருவுருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.


இந்த கோபுர உச்சியிலிருந்து பார்த்தால் திருக்கோஷ்டியூர் நம்பிகளும், ராமானுஜரும் வாழ்ந்த வீடுகள் அமைந்திருந்த பகுதி யைக் காணலாம். இந்த வீடு கல்திருமாளிகை என்ற ழைக்கப்படுகிறது. நம்பியின் வம்சாவழியினர் இன்னமும் இவ்வூரில் வாழ்ந்து வருகிறார்கள் கீழிறங்கி வந்தால் தாயார் திருமகள் நாச்சியாரை தரிசனம் செய்யலாம்.




aanmeegamalar.com








# மதுரையில் உள்ள பஞ்ச பூத தலங்கள்

சிவ பெருமான் கோவில் கொண்டுள்ள தலங்களில் முக்கியமானதாக கருதப்படுவது பஞ்ச பூத தலங்கள். காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்காவல், காளகஸ்தி ஆகிய ஐந்து தலங்கள் மட்டுமின்றி சென்னை, மதுரை உள்ளிட்ட ஊர்களிலும் பஞ்ச பூதங்களின் வடிவமாக கோவில் கொண்டு சிவ பெருமான் அருள்பாலிக்கிறார்.

அந்த வகையில் மதுரையில் சிவனுக்குரிய பஞ்சபூதஸ்தலங்களும், அந்தக் கோவில்களில் நடைபெறும் பூஜைகளைப் பற்றிப் பார்ப்போம்.

### 1.இம்மையில் நன்மை தருவார் திருக்கோயில் (நிலம்) பெரியார் பேருந்து நிலையம்

முதலாம் கால பூஜை : இரவு 10 மணிக்கு
இரண்டாம் கால பூஜை : இரவு 12மணிக்கு
மூன்றாம் கால பூஜை : அதிகாலை 2 மணிக்கு
நான்காம் கால பூஜை : அதிகாலை 4 மணிக்கு

### 2.திருவுடையார் திருக்கோயில் (நீர்) செல்லூர்

முதலாம் கால பூஜை : இரவு 9:30 மணிக்கு
இரண்டாம் கால பூஜை : இரவு 11:30 மணிக்கு
மூன்றாம் கால பூஜை : அதிகாலை 1: 30 மணிக்கு
நான்காம் கால பூஜை : அதிகாலை 3:30 மணிக்கு

### 3..தென் திருவாலவாய் திருக்கோயில் (அக்னி) தெற்கு மாசி வீதி

முதலாம் கால பூஜை : இரவு 10 மணிக்கு
இரண்டாம் கால பூஜை : இரவு 12மணிக்கு
மூன்றாம் கால பூஜை : அதிகாலை 2 மணிக்கு
நான்காம் கால பூஜை : அதிகாலை 4 மணிக்கு

### 4.முக்தீஸ்வரர் திருக்கோயில் (வாயு) தெப்பக்குளம்

முதலாம் கால பூஜை : இரவு 9 மணிக்கு
இரண்டாம் கால பூஜை : இரவு 11மணிக்கு
மூன்றாம் கால பூஜை : அதிகாலை 1 மணிக்கு
நான்காம் கால பூஜை : அதிகாலை 3 மணிக்கு

### 5. ஆதி சொக்கநாதர் திருக்கோயில் (ஆகாயம்) சிம்மக்கல்

முதலாம் கால பூஜை : இரவு 10 மணிக்கு
இரண்டாம் கால பூஜை : இரவு 12 மணிக்கு
மூன்றாம் கால பூஜை : அதிகாலை 2 :30 மணிக்கு
நான்காம் கால பூஜை : அதிகாலை 4 மணிக்கு

சிவபெருமானுக்கு உகந்த சிவராத்திரி நாளில் இந்த ஐந்து ஸ்தலங்களையும் ஒருங்கே தரிசித்தால் கூடுதல் பலன் கிடைக்கும்.

ரெயின்போ சோலார் பவர்

MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY

RAINBOW SOLAR POWER

PM - SURYA GHAR : MUFT BIJLI YOJANA

| Suitable Rooftop Solar Plant Capacity | Subsidy Support |
|---|---|
| 1 kw | Rs.30,000/- |
| 2 kw | Rs.60,000/- |
| 3 to 10 kw | Rs.78,000/- |

வீடுகளுக்கு
மத்திய அரசின் மானியத்துடன்
சோலார் அமைக்க
குறைந்த வட்டியில் வங்கி கடன் வசதி
செய்து தரப்படும்.

Save upto 90% on Electricity Bill 25 Years
Solar Panel Performance Warranty
Finance @ 7 % Interest Payback
Period 3-5 years



ரெயின்போ சோலார் பவர் 9171595790 / 9585409690

பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, கடைகள் மற்றும் தொழிற்சாலைகளிலும் அமைக்கலாம்

# M.A.K. COLLEGE OF ARTS AND SCIENCE FOR WOMEN

M.A.K. EDUCATIONAL TRUST
MANAMADURAI
KNOWLEDGE IS POWER

# எம்.ஏ.கே. கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

எம்.ஏ.கே. கல்வி அறக்கட்டளை
மானாமதுரை
அறிவே ஆற்றல்

எம்.ஏ.கிருஷ்ணசுவாமி தோட்டம், தெ.புதுக்கோட்டை சாலை,
(பிரத்தியங்கிராதேவி கோவில் அருகில்) மானாமதுரை - 630 606,
சிவகங்கை மாவட்டம்.

**Phone : 70920 55005**

## ADMISSIONS OPEN 2025 - 2026

Application Forms can be had from the College office between 9.00 a.m & 5.00 p.m

**College Bus facility available**

**கல்லூரி பேருந்து வசதி உள்ளது**

### COURSES OFFERED

- B.Com. (General)
- B.Com. (CA)
- B.Sc. (Computer Science)
- B.Sc. (IT)
- B.C.A
- B.B.A



# மதுரையில் ஒரு வாயுஸ்தலம்
# காளஹஸ்திக்கு இணையான கோவில்






மதுரையில் பழங்காநத்தம் பகுதியில் உள்ளது காசிவிஸ்வநாதர் கோயில். இங்கு இறைவன் வாயு ரூபத்தில் இருக்கிறார்.

அதற்கு சான்றாக காற்று புக முடியாமல் வடிவமைக்கப் பட்டுள்ள விசாலாட்சி அம்மன் கருவறைக்குள் உள்ள விளக்கு எப்போதும் அசைந்து கொண்டே இருக்கிறது.

மனிதனுக்கு தேவையான நோயற்ற வாழ்க்கையும், ஞானமும், முக்தியும் இந்த தலத்திற்கு சென்று வழிபட்டால் கிடைத்து விடும்.

மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரரின் திருமணம் சிறப்பாக நடந்தது.

விஷ்ணு தாரை வார்த்து கொடுக்க பிரம்மா சிறப்பாக நடத்தி வைத்தார்.

இந்த தெய்வீக திருமணத்தை காண வந்தவர்களில் பதஞ்சலி மகரிஷியும், வியாக்ரபாதரும் அடங்குவர்.

இவர்கள் இருவரும் தினமும் சிதம்பரம் பொன்னம்பலத்தில் சிவனின் நடனத்தை பார்த்த பின் தான் உணவருந்துவதை கடமையாக கொண்டிருந்தனர்.

இப்போது மதுரையில் இருப்பதால், அவர்களது விருப்பப்படி வெள்ளியம்பலத்தை தோற்றுவித்து அதில் நடனமாடினார் சிவன்.

இந்த திருநடனத்தை தரிசித்தபின் தான் பதஞ்சலியும், வியாக்ரபாதரும் சாப்பிட்டனர். பின்னர் பதஞ்சலி மகரிஷி ஒரு வில்வமரத்தின் கீழ் யோகத்தில் அமர்ந்தார்.

மதுரையை ஆண்ட சடையவர்ம விக்ரமபாண்டியன் இக்கோயிலைக் கட்டினான்.

முக்தி தரும் தெய்வமான காசி விஸ்வநாதரைத் தினமும் வழிபட வேண்டும் என்பது இவனது ஆசை.


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
தன்வந்திரி
ஆயுர்வேத வைத்தியசாலை
அரசு பதிவு பெற்ற மருத்துவமனை
HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 • ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL
இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் எதிர்புறம், அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி, தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500


சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு, MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர், காவல் நிலையம் பின்புறம், இராமநாதபுரம்.
அலைபேசி: 9944167183, 9360132498

41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.
Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com
Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791


தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics

ஆனால், தினமும் காசி சென்று வழிபட இயலாதென்பதால், பதஞ்சலியின் யோக பீடத்தில் கோயில் கட்டி அதில் காசி விஸ்வநாதர் விசாலாட்சியை பிரதிஷ்டை செய்து வழிபட்டு முக்தியடைந்தான். இங்கு விஸ்வநாதர் கிடந்த கோலத்தில் அருள்பாலிக்கிறார்.



பொதுவாக பெரிய லிங்கங்களை நின்ற கோலம் என்றும், இதற்கடுத்த நிலையில் உள்ள லிங்கங்களை அமர்ந்த கோலம் என்றும், சிறிய லிங்கங்களை கிடந்த கோலம் என்றும் சொல்வதுண்டு.

தல நாயகி விசாலாட்சி சிவனின் ஆவுடையார் மேல், தாமரை மலரில், ஸ்ரீசக்கரத்தில் நின்று அருள்பாலிப்பதால் முப்பீட நாயகி என அழைக்கப்படுகிறார்.

இவர்களை வழிபட்டால் இல்வாழ்க்கை சிறப்பாக அமையும். முக்தி கிடைக்கும்.

காளஹஸ்தியில் இறைவன் வாயு உருவமாக இருக்கிறார். அதே போல் இங்கு அம்மனின் கருவறைக்குள் உள்ள விளக்கு எப்பொழுதும் அசைந்து கொண்டே இருக்கிறது.

இராகு கேதுவுக்கு அதிபதியான பதஞ்சலி மகரிஷி இங்கு வழிபட்டு காட்சி கொடுப்பதால். இராகு, கேது தோஷம் உள்ளவர்கள், சர்ப்ப தோஷம் உள்ளவர்கள் இவரை வணங்கினால் தோஷம் விலகுவதோடு திருமண தடையும் நீங்கும் என்பது நம்பிக்கை. இத்தலம் காளஹஸ்திக்கு சமமான ஸ்தலமாக போற்றப்படுகிறது.

நீண்டகாலமாக பிரிந்து வாழும் தம்பதியினர் பதஞ்சலிக்கு மல்லிகை மாலை அணிந்து வழிபட்டால் சேர்ந்து விடுகிறார்கள்.

பதஞ்சலிக்கு துலாபாரம்' காணிக்கை செலுத்துவது விசேஷம். யோகம், தியானம் செய்ய விரும்புபவர்கள் இங்கு வந்து பதஞ்சலி அமர்ந்த வில்வ மரத்தின் கீழ் வடக்கு பார்த்து அமர்ந்து யோகாசனம் செய்தால் மனம் தெளிவடையும், ஞான வேட்கை உண்டாகும், ஞாபக சக்தி பெருகும், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கலாம்.

சாதாரணமாக கோயில்களில் சிவ துர்க்கை, விஷ்ணு துர்க்கை சன்னதி தான் இருக்கும். ஆனால், இங்கு கனக துர்க்கை அருள்பாலிக்கிறாள்.

செவ்வாய், வெள்ளி இராகு காலத்தில் மஞ்சள்நிற அரளியால் அர்ச்சனை செய்து வழிபட்டால் கடன் தொல்லை நீங்கும், செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை.

முக்திதரும் காசிவிஸ்வநாதரை, சூரியபகவான் ஏப்ரல் 5 முதல் மே 5 வரை காலை 6.35 முதல் 7.15 வரையிலும், செப்டம்பர் 5 முதல் அக்டோபர் 5 வரை காலை 6.40 முதல் 7.15 வரையிலும் தரிசிக்கிறார்.

aanmeegamalar.com







# அழகருக்கான நைவேத்யமாக மாறிய வத்தல், கொள்ளு, காரப்பயிறு

கிழக்கு மற்றும் தெற்கு ரத வீதி சந்திக்கும் இடத்தில் ஒரு மூதாட்டியின் வீடு இருந்தது. அந்த மூதாட்டி அழகரின் தீவிர பக்தை. அந்த மூதாட்டி அழகருக்கு ஏதாவது படைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் அவர் வீட்டில் மிதுக்க வத்தல், கொள்ளு, காரப்பயிறு தான் இருந்தனவாம். ‘சரி இதை அழகருக்கு நைவேத்யமாக படைக்கலாம்’ என்று நினைத்த அம்மூதாட்டி, நேரில் வர கூச்சம் கொண்டு மனதாலே படைத்தாராம்.

அன்று அழகர் தேரில் வீதி உலா வரும் சமயம், அத்தேரானது அந்த மூதாட்டி வீட்டின் வாயிலில் வந்து நின்று விட்டது. காரணம் தெரியாத மக்கள் யோசித்தபடி நிற்க...

அப்பொழுது ஒரு அசரிரீ “எனது பக்தை ஒருவள், எனக்காக மிதுக்க வத்தல், கொள்ளு காரபயிரை வைத்திருக்கிறாள். எனக்கு அது வேண்டும்” என கூறவும், வியப்புற்ற மக்கள் மூதாட்டியின் பக்தியை எண்ணி வியந்தனராம்.

இந்த புராண கதையை மையமாக கொண்டு, சித்திரை திருவிழாவில் இன்றும்கூட ‘ஒரு நாள் நைவேத்தியமாக’ அழகருக்கு இவையாவும் படைக்கப்படுகின்றன.



எல்லா புகழும் இறைவனுக்கே...

சித்திரை திருவிழா காணவரும் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

AnnaA Gold AGMARK EDIBLE OIL

சமையல் எண்ணெய் வகைகள் மற்றும் பாரம்பரிய செக்கு எண்ணைய் வகைகள்

பாத்திமா எண்டர்பிரைசஸ்

1186-பாஞ்சுபீர் ஒலியுல்லாஹ் தர்ஹா, கன்னார் தெரு, மானாமதுரை -630606

For any queries please call customer care No. +91 98420 - 85666

# மதுரையில் சுழலும் லிங்க ஓவியம்



இறைவன் இல்லாத இடம் ஏதுமில்லை. நம் கண்களுக்கு புலப்படாத அணுவிலும் அணுவாக உள்ள மிகச்சிறிய பொருளிலும் கூட அவர் வியாபித்திருக்கிறார். ஒருசமயம் அவ்வைப்பிராட்டி, சிவபெருமானைத் தரிசிக்க கைலாயம் சென்றார். நீண்டதூரம் நடந்து வந்ததால், களைப்பில் ஓரிடத்தில் அமர்ந்தார். அப்போது சிவன் இருந்த திசையை நோக்கி காலை நீட்டினார். இதைக்கண்ட பார்வதிக்கு கோபம் வந்துவிட்டது.

அவ்வையிடம் வந்த பார்வதி, அவ்வையே! உலகாளும் என் தலைவனாகிய சிவபெருமான், அமர்ந்திருக்கும் இடத்தை பார்த்து, காலை நீட்டி உட்கார்ந்திருக்கிறீர்களே! இது அவரை அவமரியாதை செய்வது போலல்லவா உள்ளது. எனவே, காலை வேறு பக்கமாக நீட்டிக்கொண்டு அமருங்கள் என்றாள். இதைக்கேட்ட அவ்வை சிரித்தார்.

அம்பிகையிடம், தாயே! என்ன சொல்கிறீர்கள்? சிவன் இல்லாத இடம் பார்த்து காலை நீட்டுவதா? அப்படியொரு இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே! அப்படியே இருந்தாலும் அந்த திசையை நீங்க ளே சொல்லுங்கள்! அத்திசை நோக்கி என் காலை நீட்டிக்கொள்கிறேன், என்றார். அப்போதுதான் சிவபெருமான் இல்லாத இடமென்று ஏதுமில்லை. அவர் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்ற உண்மை அம்பிகைக்கு விளங்கியது.

இவ்வாறு இறைவன் எங்கும் இருப்பதை உணர்த்தும் விதமான சிவலிங்க ஓவியம், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் வரையப்பட்டுள்ளது. மீனாட்சி அம்மன் சன்னதியிலிருந்து, சுந்தரேஸ்வரர் சன்னதிக்குச் செல்லும் சிவன் சன்னதி இரண்டாம் பிரகாரத்தில் (முக்குறுணி விநாயகர் சன்னதி அருகில்) மேற்கூரையில் இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது. பேரொளியுடன் கூடிய ஒரு வட்டத்தின் மத்தியில், சிவலிங்கம் இருக்கும்படியாக இந்த ஓவியம் வரைப்பட்டுள்ளது. லிங்கத்தின் உச்சியில் தாமரை மலர் உள்ளது.

இந்த லிங்கத்தை எந்த திசையில் நின்று பார்த்தாலும், சிவலிங்கத்தின் ஆவுடை(பீடம்) நம்மை நோக்கியிருப்பது போல தோன்றும் என்பது தான் இதன் ஸ்பெஷாலிட்டி. கிழக்கு நோக்கி நீங்கள் நின்றால் உங்கள் பக்கம் ஆவுடை திரும்பி விடும், மேற்கே சென்றால் அங்கு வந்து விடும்.

குறுக்காக நின்று பார்த்தால் அந்தப் பக்கமாக வந்துவிடும். இப்படி ஒரு அதிசய ஓவியம் இது. சிவன் எங்குமிருக்கிறார் என்பதை இந்த ஓவியம் சுட்டிக்காட்டுகிறது.

இந்த சிவலிங்க ஓவியத்துக்கு, மானசீகமாக அபிஷேகம் செய்வதாக கற்பனை செய்தபடியே வழிபட்டால், அபிஷேக நீர் நம் மீது விழுவது போலவே இந்த அமைப்பு உள்ளது. சுற்றிச்சுற்றி எந்த திசையிலிருந்து பார்த்தாலும், நம்மை நோக்கி சுழன்றபடி காட்சியளிப்பதால் இதற்கு, சுழலும் லிங்கம் என்று பெயர் வைத்துள்ளனர்.

புராதனமான வரலாறுகள், சிவபெருமான் திருவிளையாடல் நிகழ்த்திய லீலைகள், காண்போர் வியக்கும் நுணுக்கமான கட்டடக்கலை, அற்புதமான சிற்பங்கள் என கணக்கிலடங்காத சிறப்புக்களுடன், அன்னை மீனாட்சியும், தந்தை சொக்கநாதரும் ஆட்சி செய்யும் புண்ணியத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோயிலுமதுரையில் சுழலும் லிங்கம்!

Temple City
Temple of Hotels
PRODUCT of INDIA
HOME - MADE
PODI, PICKLES
& VADAGAMS
Scan for Details
NEW JAIL ROAD 86055 13333
THALAVOY STREET 95752 93333
MATTUTHAVANI 98946 83335
PERIYAR BUS STAND 96296 83333
BIBIKULAM 95970 13333
UTHANGUDI 99943 33396
AYYANKOTTAI, NH-44 97913 93333
VADIPATTI, NH-44 97915 93333
SIVARAKOTTAI, NH-44 86082 83333
ALAMPATTI, NH-744 97870 08333
RAILWAY JUNCTION 80554 93333
BATLAGUNDU BYPASS 88016 93333
Soon at SILAIMAN NH-87 KARIAPATTI NH-38
www.templecityfoodproducts.com
www.hoteltemplecity.com
customercare@hoteltemplecity.com
/hoteltemplecity

aanmeegamalar.com

## புதன் ஷேத்திரமாக திகழும் குபேரன் பிரதிஷ்டை செய்த

# ஆதிசொக்கநாதர் திருக்கோயில்

ஆதி சொக்கநாதர் கோவிலில் உள்ள சிவ லிங்கம், குபேரன் பூஜித்த இந்த லிங்கமாகும். இது மிகவும் சிறப்பு வாய்ந்தது. நவகிரகத்தில் புதன் இங்கு வந்து வழிபட்டதால் ஆரம்ப காலத்திலிருந்து இந்த தலம் புதன் ஷேத்திரமாக விளங்குகிறது, இத்தலம் மதுரை சிம்மக்கல்லில் அமைந் துள்ளது.


இத்தலத்திற்கு அதிபதி குபேரன். இந்த குபேரனே தன்னிடம் உள்ள செல்வம் மேன்மேலும் பெருக சொக்கநாதரை வழிபட்டு, பிரதிஷ்டை செய்த கோயில் ஆதிசொக்கநாதர் கோயில்.

பிரார்த்தனை வறுமை, திருமணத் தடை மற்றும் குழந் தை இல்லாதவர்கள் இத்தலத்திற்கு வந்து வேண்டிக் கொண்டால் ஒரு மண்டலத்திற்குள் சிறந்த பலன் கிடைக்கும்.

நேர்த்திக்கடன் புதனுக்கு பரிகாரம் செய்பவர்கள், பாசிப்பருப்பு சுண்டல், பச்சை நிறத்தில் ஆடை, மரிக் கொழுந்து மாலை என எல்லாமே பச்சை நிறத்துடன் வழிபட்டால் தோஷம் நீங்கி நலம் பெறுவார்கள்.

தலபெருமை சிவன் லிங்கங்களிலேயே, குபேரன் பூஜித்த இந்த லிங்கம் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

மதுரையை குசேல பாண்டியன் என்ற மன்னன் ஆட்சி செய்தான். மன்னன் கல்வியில் மிகச் சிறந்தவன் என்பதை கேள்விப்பட்டு, தமிழ்ச்சங்கத்தில் புலவராக இருந்த கபிலரின் நண்பரான இடைக்காடர், பாண்டியனின் அரண்மனைக்கு சென்று தான் கொண்டு வந்த பாடலால் மன்னனைப் புகழ்ந்து பாடினார். இவரது பாடலால் பொறமைப்பட்ட பாண்டிய மன்னன் சரியாக உபசரிக்காமல் இருந்தான். இதனால் மனம் வருந்திய இடைக்காடர், அங்குள்ள கோயிலுக்கு சென்று இறைவனை வணங்கி, ""இறைவா! பாண்டிய மன்னன் தமிழ்புலமை வாய்ந்தவன் என்று நினைத்து அவனைப் பாடினேன்.



ஆனால், அவனோ பொறாமையால் என்னை அவமதித்து விட்டான். அவன் என்னை அவமதித்தானா, அல்லது உன்னை அவமதித்தானோ என்பது எனக்கு தெரியாது," என்று சிவனிடம் விண்ணப்பம் செய்து தணியாத கோபத்துடன் வடதிசை நோக்கி சென்றார்.

இதைக் கேட்ட சிவன், தன்னுடைய லிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியுடன் கோயிலுக்கு நேர் வடக்கே, வைகை ஆற்றுக்கு தெற்கே உள்ள கோயிலில் எழுந் தருளியதுடன், இடைக்காடருக்கும் காட்சி கொடுத்து மன்னனுக்கு பாடம் புகட்டுவதாக கூறினார்.

திருப்பள்ளியெழுச்சி நேரத்தில் இறைவனை தரிசிக்க வந்த பக்தர்கள் அங்கு சிவலிங்கத்தை காணாமல் அதிர்ச்சியடைந்து, இந்த விஷயத்தை பாண்டிய மன்னனிடம் தெரிவிக்க வந்தார்கள். அப்போது நகரமே பொலி விழந்து இருப்பதையும் கண்டார்கள். பதட்டத்துடன் மன்னனிடம் சென்று, ""மன்னா! கோயிலில் இறைவனைக் காணோம், நகரமும் பொலிவிழுந்து கிடக்கிறது," என்று தெரிவித்தார்கள்.

நடந்ததைக் கேள்விப்பட்ட மன்னன், மிகவும் வருத்தத்துடன், ""இறைவா! நான் செய்த தவறு என்ன? தாங்கள் உமா தேவியுடன் இங்கிருந்து எங்கு சென்றீர்கள்?" என்று இறைவனிடம் கெஞ்சி மன்றாடினான்.

அப்போது மன்னன் இடைக்காடரை அவமதித்ததால் தான் சிவன் அங்கிருந்து சென்றதாக அசரீரி கூறியது. சிலர் ஓடி வந்து, வைகை ஆற்றுக்கு தென்கரையில் உள்ள கோயிலில் உமாதேவியுடன் சொக்கநாதர் எழுந்தருளியிருக்கும் விஷயத்தை மன்னனிடம் தெரிவித்தனர்.

உடனே, மன்னன் அந்த இடத்திற்கு சென்று, ""சொக்கா!, தாங்கள் அங்கிருந்து இங்க வந்து எழுந்தருளியிருப்பதன் காரணம் என்ன? நான் தவறு ஏதும் செய்தேனா? அல்லது வேறு யாரேனும் தவறு செய்து விட்டார்களா?" என கேட்டு மன்றாடி, இறைவனை போற்றி துதி பாடினான்.

மன்னனின் துதியால் மகிழ்ந்த சொக்கன், ""பாண்டியனே!, எல்லாத் தலங்களிலும் இந்த திருவாலவாயே உயர்ந்தது. மேலும் யாம் இருக்கும் லிங்கங்களிலேயே, எனது தோழன் குபேரன் பூஜித்த இந்த லிங்கம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. எனவே இன்று முதல் இந்த தலம் உத்தரவாலவாய் என்று அழைக்கப்படும் என்று கூறினார்.

மேலும் இந்த கோயிலுக்கு ஆதிசொக்கநாதர் கோயில் என்றும், பழைய சொக்க நாதர் கோயில் என்றும், வடதிருவாலவாய் என்றும் பெயருண்டு.



aanmeegamalar.com

# சந்தியாந்ருத்த மூர்த்தி வடிவமான
# மதுரை வெள்ளியம்பல நடராஜரின் தேவ ரகசியம்!

சந்தியாந்ருத்த மூர்த்தி வடிவமான மதுரை வெள்ளியம்பல நடராஜரை பற்றிய தேவ ரகசியம்!

பிரதோஷகாலத்தில் சிவபெருமான் நடனம் ஆடியதால் அவரது பெயர் சந்த்யாந் ருத்த மூர்த்தி என்றானது. சதாசிவ மூர்த்தி யின் உச்சியில் அமைந்துள்ள ஈசான முகத் திலிருந்து தோன்றிய வடிவமே நடராஜ மூர்த்தியாவார்.

அவரது வடிவமே சந்த்யாந்ருத்த மூர்த்தி போன்ற பல வடிவமாகப் பரந்து விரிந்தது.

இந்த சந்த்யாந்ருத்த மூர்த்தியை தரிசிக்க வேண்டுமானால் நாம் மதுரைக்கு செல்ல வேண்டும்.

பெரும்பாலும் நடராஜர் வலது காலை ஊன்றி, இடது கால் தூக்கி திரு நடனம் புரிந்த நிலையிலேயே அனைத்து ஆலயங்களிலும் இருக்கிறார்.



ஆனால் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் உள்ள வெள்ளியம்பலத்தில் மட்டும் நடராஜர் இடது கால் ஊன்றி வலது கால் தூக்கி தாண்டவம் ஆடுகிறார்.

மதுரை வெள்ளியம்பலத்தில் உள்ள இந்த இந்த சந்த்யாந்ருத்த மூர்த்தியை நாம் வணங்குவோமானால் இவர் நம் தொழில்களை காப்பதுடன் பலகலைகளில் சிறப்பு பெற உதவுவார். என்பது தேவ ரகசியம்.

இவருக்கு செந்தாமரையால் அர்ச்சனையும், தேங்காய் சாத நைவேத்தியமும் திங்கள், புதன் கிழமை மாலையில் செய்ய தடைகள் அகலும், விரோதிகள் ஒழிவர்.

நன்மை பாராட்டுவர். மதுரை வெள்ளியம்பல நடராஜ பெருமானுக்கு பன்னீரால் அபிஷேகம் செய்தால் கல்வியறிவு மேன்மையடையும் என்பது தேவ ரகசியம்.


அருண்கேஸ் ஏஜன்ஸீஸ்









மக்கள் சேவையில் 25 ஆண்டுகள்

Bharatgas

भारत पेट्रोलियम

இலவச இணைப்பு வழங்கப்படுகிறது, பதிவு செய்தவுடன் சிலிண்டர் வழங்கப்படுகிறது,
வீட்டிற்கே நேரடியாக வந்து உடனடி இணைப்பு வழங்கும் ஒரே நிறுவனம்

தொடர்ந்து எங்களுக்கு ஆதரவு அளித்துவரும் வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் நன்றி நன்றி

1/86 பூவந்திமெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் செல் 9443274648



# விபூதி விநாயகர் வழிபாட்டில் மறைந்துள்ள சூட்சும ரகசியம்

மதுரை மீனாட்சி அம்மன் ஆலய விபூதி விநாயகர் வழிபாட்டில் சூட்சும ரகசியம் மறைந்துள்ளதாக கூறுவர்.

விநாயகரின் பலவிதமான வடிவங்களில் விபூதி விநாயகரும் ஒருவர்.

மீனாட்சி அம்மன் கோவிலின் தெற்கு கோபுரத்தை கடந்து உள் நுழையும் இடத்தில் பக்தர்கள் விபூதியால் அர்ச்சிக்கும் விபூதி விநாயகர் காணலாம்

மதுரை மீனாட்சியம்மன் கோயில் பொற்றாமரை குளக்கரையில் கன்னிமூலையான தென்மேற்கில் அருள் பாலிக்கும் இந்த விபூதி விநாயகர், இங்கே 2000 வருடங்களாக வீற்றிருந்து அருள்பாளிக்கிறார்.

விபூதி விநாயகர் மன்னர்கள் காலத்தில் யாரோ ஒரு சிற்பி, இக்கோவிலுக்கு வரும் அனைத்து பக்தர்களும் தாங் களே அபிஷேகம் செய்து கொள்ளும் வகையில் விநாயகர் சிலையை ஏற்பாடு செய்து தரவேண்டும் என மன்னரிடம் கேட்டிருக்க வேண்டும்.

அதன் அடிப்படையில் இந்த விபூதி விநாயகர் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள்.

பக்தர்கள், தாங்கள் கொண்டு வரும் விபூதியைக் கொண்டு இவருக்கு அபிஷேகம் செய்கிறார்கள்.

அவ்வாறு அபிஷேகம் செய்தால் செல்வம் சேரும் என்பது பக்தர்களது நம்பிக்கை.

விபூதி என்றால் `மேலான செல்வம்' என்பது பொருள்.

இவரை வணங்கினால், வாழும் காலத்தில் பெரும் பொருளும், வாழ்க்கைக்கு பிறகு மோட்சம் என்னும் பிறவா நிலை செல்வமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

பொதுவாக நாம் உலகில் ஆதிமூலமாக விநாயகரைத்தான் கருதுகிறோம்.

அவரை வணங்கிய பிறகுதான் பிற தெய்வங்களை வணங்குவது மரபு.

இந்த மரபை விநாயகரும் பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில், விநாயகர் கூட எந்த பூஜையை தொடங்கு வதாக இருந்தாலும் தன்னைத்தானே வணங்கி தொடங்க வேண்டும் என்பதன் அடிப்படையில் இந்த சன்னதி அமைக்கப்பட்டுள்ளது என்கிறார்கள்.

பக்தர்கள் தங்கள் கைகளாலேயே திருநீறு அபிஷேகம் செய்து இவரைவழிபடுவது சிறப்பு.

இவரை விபூதி அபிஷேகம் செய்து வழிபட்டால், இப்புவியில் வாழும்போது நிறைய செல்வமும், வாழ்க்கைக்கு பிறகு மீண்டும் பிறவா நிலை என்னும் செல்வமும் கிடைக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

மகம், உத்திரம், விசாகம், கேட்டை, பூராடம் நட்சத்திர நாட்களில் இந்த விபூதி விநாயகருக்கு திருநீற்றால் அபி ஷேகம் செய்து வழிபட்டால், எண்ணிய எண்ணம் விரைவில் நிறைவேறும் என்பதே இந்த விபூதி விநாயகர் வழிபாட்டில் மறைந்துள்ள சூட்சும ரகசியமாகும்.

## இன்னொரு விபூதி விநாயகர்

அதிகம் பேருக்கு தெரியாத மதுரையில் அமைந்துள்ள மற்றொரு விபூதி விநாயகர் திருக்கோவில், பசுமலை, மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலின் கிழக்குமுக எல்லைக்கோவிலாக திகழும் மற்றொரு அருள்மிகு விபூதி விநாயகர் திருக்கோவில் மதுரை மாவட்டத்தில் உள்ள பசுமலையிலுள்ளது.

சுற்றியுள்ள கோவில்களில் முளைப்பாரி விழாவின்போது கரக அலங்காரம் இக்கோவிலில் இருந்துதான் நடைபெறு கிறது இந்த விபூதி விநாயகருக்கு முதல் பூஜை செய்தபிறகுதான் மற்ற கோவில்களில் உள்ள பிரதான தெய்வங்களுக்கு பூஜை நடக்கிறது.

ஊர் திருவிழாக்கள் தடையின்றி நடைபெற இவர் அருள் வேண்டுமென ஊர் மக்கள் கூறுகிறார்கள்.

கோவில் கட்டப்பட்ட காலத்தில் மூலவர் விநாயகப்பெருமான் தாமரை மலர் மேல் அமர்ந்து அருள்பாலித்து வந்துள்ளார். அவருக்கு முன்பு நந்தி இருந்தது.

விநாயகப் பெருமானை சிவபெருமானாக வழிபட்டதால் நந்தி அமைக்கப்பட்டிருந்தது. தற்போது மூலவர் அருகில் ராகு, கேது முன்புறம் மூஞ்சூறு அமையப்பெற்றுள்ளது.

கோவில் வளாகத்தில் காசிவிஸ்வநாதர் விசாலாட்சியும் இவர்கள் முன்பு நந்தியும், மறுபுறம் பாலமுருகன், தட்சிணாமூர்த்தி, துர்க்கை அம்மன் நவக்கிரகங்கள் அமையப்பெற்றுள்ளது. ராகு, கேதுவுடன் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருப்பது வேறு எங்கும் காணக்கிடைக்காத சிறப்பாகும் சகல ஐஸ்வரியங்களும் கிடைக்க இங்கு பிரார்த்தனை செய்கிறார்கள்.

aanmeegamalar.com

## மன்னராக இருந்து முனீஸ்வரராக மாறிய

# மதுரை பாண்டி முனீஸ்வரர்



முன்னொரு காலத்தில் பெரியசாமி மற்றும் வள்ளியம்மாள் என்கிற தம்பதி காட்டுப் பாதை வழியாக மதுரைக்கு வருகிறார்கள். தற்போது மதுரையில் இருக்கும் மேலமடை, மாட்டுத்தாவணி போன்ற இடங்கள் ஒருகாலத்தில் பயங்கரமான காடாக இருந்தது.

அந்தப் பகுதிக்கு வந்ததும் தங்கள் பயணக் களைப்பு தீருவதற்காக அங்கிருந்த மரத்திற்கு அடியில் படுத்து உறங்குகிறார்கள். அப்போது வள்ளியம்மாள் கனவில் ஜடாமுடியுடன் பத்மாசனம் போட்டுக் கொண்டு முனிவர் ஒருவர் தோன்றுகிறார். அவள் கனவில் தோன்றிய முனிவர் கீழ்வருமாறு கூறுகிறார்,

"பெண்ணே! நான் பாண்டிய மன்னன் நெடுஞ்சேழியன் ஆவேன். கோவலனும், கண்ணகியும் மதுரைக்கு வந்தப் போது ஆட்சி செய்துக் கொண்டிருந்தவன். சரியாக விசாரிக்காமல் கோவலனை தண்டனைக்கு உள்ளாக்கியது நான்தான். அதனால் தான் அநீதி என்று தெரிந்ததும் தாங்கிக்கொள்ள முடியாமல் அந்த கணத்திலேயே என் உயிரை விட்டேன்.

நான் இறந்து சிவலோகம் சென்ற போது சிவபெருமான், நீ பாவம் செய்துவிட்டாய் இருந்தாலுமே அநீதி என்று தெரிந்து உன் உயிரை விட்டாய். எனவே, நீ பூமி சென்று பிறந்து, வாழ்ந்து பிறகு சிவலோகத்திற்கு வருவாயாக!' என்று கூறினார்.


ஆனால், எனக்கு பூமி சென்று மறுபடியும் வாழ்வதற்கு இஷ்டமில்லை. பூமிக்கடியிலேயே அந்த ஈசனை எண்ணி தவம் செய்யத் தொடங்கினேன். பூமிக்கு அடியில் என்னுடைய தவம் முடிவுக்கு வந்தது. எனவே, என்னை மேலே எடுத்து வழிப்பட்டால் உன்னையும், உன் குடும்பத்தையும், என்னை நாடி வந்த அனைவரையும் நான் பாதுகாப்பேன்' என்று கூறினார்.

தன்னுடைய கனவில் முனிவர் கூறியதைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்த வள்ளியம்மாள், இதைப் பற்றி தன் கணவரிடம் கூறிவிட்டு ஊர் மக்களை அழைத்து வரச் சொன்னாள்.

ஊர் மக்களும் அந்த இடத்தை வந்து தோண்ட ஆரம்பிக்கிறார்கள். அப்போது அந்த இடத்தில் மிரட்டும் விழிகள், மீசை மற்றும் நீண்ட ஜடாமுடியுடன் சமணமிட்ட தவக்கோலத்தில் சுவாமி சிலை கிடைக்கிறது. ஊர் மக்கள் அதே இடத்தில் அந்த சிலையை பிரதிஷ்டை செய்து பாண்டி முனீஸ்வரராக வழிப்பட்டு வருகிறார்கள்.

இன்றைக்கும் மதுரையில் வாழும் பலபேருக்கு பாண்டி முனிதான் குலதெய்வமாகவும், காவல் தெய்வமாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது



கள்ளழகரை தரிசிக்க வாருங்கள்
மதுரை கலையகம்
கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.

V.சுந்தரவடிவேல்
Visit: www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939
27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1





மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

184 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன

8.05.2025 சிறப்பிதழ்





ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622 / 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


## நண்பர்கள் மற்றும் உறவினருடன் சண்டையா?

# அழகர் கோவில் தோசையை சாப்பிட்டால் உறவு பிரியாமல் இணைந்து வாழலாம்

குடும்பத்தில், உறவினர்களுக்கிடையில், நண்பர்களுக்கிடையில் ஏதோ ஒரு காரணத்துக்காகச் சண்டை வந்து, சம்பந்தப்பட்டவர்கள் மனவருத்தத்துடன் பிரிந்துவிடுவது உண்டு. அப்படிச் சண்டை போட்டுப் பிரிந்தவர்கள் மறுபடியும் அன்புப் பிணைப்போடு ஒன்று சேருவதற்கென்றே ஒரு கோயில் இருக்கிறது. மதுரை அழகர்கோவில்தான், அந்தக் கோயில்.

சண்டை போட்டுப் பிரிந்தவர்கள் அழகர்கோவிலுக்கு வந்து, அங்கே மட்டுமே பிரத்யேகமாகக் கிடைக்கும் சம்பா தோசையை வாங்கிச் சாப்பிட்டால், பங்காளிச் சண்டை, மாமன்மச்சான் சண்டை, கிராமங்களுக்கு இடையிலான சண்டை, நண்பர்களுடனான சண்டை தீர்ந்து, அன்பும் உறவும் பலம் பெறுவதாக மதுரை சுற்றுவட்டார கிராம மக்களிடம் ஒரு நம்பிக்கை இன்றும் நிலவுகிறது.

``சண்டை போட்டுப் பிரிந்தவர்கள் மறுபடியும் ஒன்றுசேர இங்கே வந்து, காவல்தெய்வமான கருப்பனுக்குக் காணிக்கை செலுத்தி, விபூதி வாங்கிக் கொள்ள வேண்டும்.

பிறகு, கள்ளழகர் கோயிலில் உள்ள உண்டியலில் காணிக்கைப் பணத்தைச் செலுத்த வேண்டும். தொடர்ந்து மலை மேல் இருக்கும் ராக்காயி அம்மன் கோயிலுக்கு அருகில் இருக்கும் நூபுரகங்கை தீர்த்தத்தில் நீராட வேண்டும்.

கையில் எடுத்துச் செல்லும் சொம்பில் கொஞ்சம் தீர்த்தமும் எடுத்துக்கொண்டு, மீண்டும் கருப்பசாமி கோட்டை வாசலுக்கு வந்துவிட வேண்டும்.

கோயில் பிராகாரத்தில் உட்கார்ந்துகொண்டு, இரு தரப்பினரும்,

"உங்களுக்கும் எனக்கும் எந்தப் பகையும் இல்லை. அப்படிப் பகையோ வெறுப்போ இருந்தால், அதைக் கருப்பனும் அழகர்மலையானும் எடுத்துவிடுவார்கள். இது சத்தியம், சத்தியம்..." என்று தீர்த்தச் சொம்பின் மீது மூன்று முறை சத்தியம் செய்துகொள்ள வேண்டும். பிறகு, சொம்பில் கொண்டுவந்த தீர்த்தத்தை ஒருவர்மீது மற்றவர் தெளித்துக் கொள்ள வேண்டும்.

சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பிறகு, கோயிலில் கிடைக்கும் சம்பா தோசையை வாங்கி, இரண்டு தரப்பினரும் சாப்பிட வேண்டும்.

இதன்மூலம் சண்டை, வெறுப்பு, கோபம் எல்லாமே நீங்கிவிடும் என்று பாரம்பரியமாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

மேலும், இப்படிச் செய்தால் சண்டைக்குப் பிறகு எதிர்த்தரப்பினரை நாம் திட்டியது, காசு வெட்டிப் போட்டது, மண்ணை வாரித் தூற்றியது போன்ற எல்லாமே நீங்கிவிடுவதாகவும் நம்புகிறார்கள். இதன்மூலம் பிரிந்த பல உறவுகள் மீண்டும் சேரமுடியும் என்று கூறப்படுகிறது.

சண்டைகளைத் தீர்த்து ஒன்று சேர்க்கும் சம்பா தோசை அழகர்கோவில் வளாகத்திலேயே செய்கின்றனர்.

இந்த சம்பா தோசையைச் சுடும் திருப்பணியை செய்யும் முன் அழகர் மலை யானையும், துடியான காவல் தெய்வமான கருப்பனையும் வணங்கிட்டுதான்



வேலையை துவங்குகின்றனர்.

பச்சரிசி, தொலி உளுந்து, சீரகம், பெருங்காயம், சுக்கு, கறிவேப்பிலை எல்லாத்தையும் சேர்த்து அரைச்சு, அத்துடன் நூபுர கங்கை தீர்த்தத்தையும் கலந்து நெய் விட்டுச் செய்யறதுதான் சம்பா தோசை.

ஒரு சம்பா தோசை 40 ரூபாய்க்குக் கோயில்ல விற்கப் படுது. இந்தக் தோசை வேற எங்கேயும் விற்கப்படுவதில்லை. சண்டை போட்டுப் பிரிந்தவர்கள்தான் சம்பா தோசையைச் சாப்பிடணும்கிற தில்லை. எல்லோருமே சாப்பிடலாம்.

சண்டை போட்டுப் பிரிந்தவர்கள் மட்டுமில்லாம, விவசாயம் செழிக்க வும் சம்பா தோசையை வாங்கிட்டுப் போறாங்க.

நெல், கரும்பு, கடலை போன்ற பயிர்களை அறுவடை செய்யும்போது, நிறைய லாபம் கிடைக்கணும்னு வேண்டிக்கிட்டு இந்தத் தோசையை வாங்கிச் செல்கின்றனர்.

அறுவடை நடக்கும்போது எல்லாருக்கும் விபூதி பூசி, இந்தத் தோசையைச் சின்னச் சின்னத் துண்டுகளாக்கிக் கொடுப்பார்களாம். இதனால விவசாயத்துல நல்ல லாபம் கிடைக்கும்கிறது என்பது பக்தர்ளின் நம்பிக்கை."

``இந்தத் தோசைக்கு சம்பா தோசை என்று எப்படிப் பெயர் வந்தது?" என்றுபார்த்தால்,

``அந்தக் காலத்துல நிறைய பேர் சம்பா நெல்லைப் பயிர் செஞ்சாங்க. அறுவடை முடிஞ்சதும், ஒரு மரக்கா சம்பா நெல்லைக் கொண்டாந்து கோயிலுக்குக் காணிக்கையா கொடுத்துடுவாங்க.

அந்த நெல்லை கைக்குத்தா குத்தி அரிசியாக்கி, அந்த அரிசியில தோசை செய்வாங்க. அதனாலதான் இதுக்கு `சம்பா தோசை'னு பேரு வந்ததாச் சொல்றாங்க. இப்ப அவ்வளவா யாரும் சம்பா நெல்லைப் பயிரிடறது இல்லைன்னாலும், அந்தப் பேரே நிலைச்சிடுச்சு என்கின்றனர்.

இந்த உலகத்தில் அன்புதான் பிரதானம். `அன்பே கடவுள்' என்று சொல்வதும் அதனால்தான். சந்தர்ப்பச் சூழ்நிலையால் ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுப் பிரிந்தாலும், அன்பின் மகத்துவத்தைப் புரிந்துகொண்டு, பகைமை மறந்து மறுபடியும் இணைய இப்படி ஒரு வழி அழகர்மலையில் இருக்கிறது.

எனவே, பகைமை உணர்வும் கசப்பு உணர்வும் கொண்டு பிரிந்தவர்கள் இங்கே சென்று சம்பா தோசை பிரசாதம் சாப்பிட்டு தங்கள் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளலாம்.

akkarai
LET'S THINNAI
The ICECREAM VAN
ONDRAHA
CHOCO Cafe
Thattankulam | Madurai | Keezhadi
Madurai

Shop Select Product of 'akkarai' Range
at www.indianfoods.in | www.akkarai.co.in
(Delivery Across India)

aanmeegamalar.com

aanmeegamalar.com







ஆன்மிகமலர்
வைகை ஆற்றில்
இறங்கும்
கள்ளழகர்


TPM BUILDERS & PROMOTERS
Best Property
Investment
TPM BUILDERS &
PROMOTERS
MADURAI
98417 50067
Buy Now & Feature is Yours





# மதுரையில் பிரசன்னமான திருப்பதி பெருமாள்

திருமலை நாயக்கர் திருப்பதி வேங்கடேசப் பெருமாள் மீது பக்தி கொண்டவர். திருப்பதியிலிருந்து மதுரைவரை மணி மண்டபங்களைக் கட்டினார் திருமலை மன்னர். தினமும் திருப்பதியில் பூஜை தொடங்கியதும் அங்கு அடிக்கப்படும் மணி ஓசையைக் கேட்டு வரிசையான மண்டபங்களின் ஒலி தொடர்ந்து ஒலித்துக் கடைசியாக மதுரை மன்னர் அரண்மனைக்கு அருகில் இருக்கும் மணி மண்டபத்தில் ஒலி ஒலிக்கும். அதைக் கேட்டதும் திருமலை மன்னன் வேங்கடவனை வணங்கிப் பின் உணவு உட்கொள்வது வழக்கம் என்று ஒரு சாரார் சொல்கின்றனர்.

சிலர் ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் மணி ஓசை கேட்கும் ஏற்பாட்டைச் செய்திருந்தார் என்றும் சிலர் அழகர் கோயில் மணி ஓசை கேட்டபின்பே பெருமாளை உணவு உட்கொள்வார் என்றும் சொல்கிறார்கள். எப்படியானாலும் திருமலை மன்னர் பெருமாள்மீது பக்தி கொண்டவர் என்பதில் ஐயமில்லை.

ஒருநாள் உரிய நேரத்தில் மணி ஓசை கேட்காததால் தன் குதிரையை எடுத்துக்கொண்டு பெருமாள் மணி மண்டபத்தை நோக்கிப் புறப்பட்டார். சிறிது தூரம் சென்றதும் குதிரை நகர மறுத்தது. மிரண்டு திமிறியது. மன்னன் அந்த இடத்தை ஆராய்ந்த போது அங்கு ஓர் அனுமன் சிலை காணக்கிடைத்தது. அனுமனை வணங்கி நின்றபோது அங்கே திருப்பதி பெருமாள் அவருக்குக் காட்சி கொடுத்தார்.

இனி தன் தரிசனத்துக்காகத் தவிக்க வேண்டாம் என்று சொல்லி இங்கேயே ஓர் ஆலயத்தை எழுப்பினால் அதில் பிரசன்னமாகி அருள்பாலிப்பேன் என்று சொல்லி மறைந்தார் பெருமாள். இதைக் கேட்ட மன்னன் உடனடியாக அங்கே ஒரு பெருமாள் கோயிலை நிர்மாணிக்க உத்தரவிட்டார். அருகிலேயே சுயம்பு ஆஞ்சநேயரையும் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்தார் என்கிறது தலவரலாறு.

கலை நயம் மிக்க இந்தத் திருக்கோயிலில் அருளும் மூலவர் திருநாமம், 'பிரசன்ன வேங்கடாசலபதி' என்பதாகும். துவாரபாலகர்களாக ஜயன் விஜயன் காட்சி கொடுக்க உள்ளே கருவறையில் வேங்கடாசலபதி நின்றகோலத்தில் பக்தர்களுக்குக் காட்சி அருள்கிறார். நேராக நின்று தரிசனம் செய்தால் பெருமாள் மட்டுமே காட்சிகொடுப்பார். அருகில் சென்றால் ஸ்ரீதேவி பூதேவித் தாயாரையும் தரிசனம் செய்து மகிழலாம். உற்சவருக்கு, ஸ்ரீநிவாசன் என்று பெயர். இங்குள்ள கிணற்று நீரே இக்கோயிலின் தீர்த்தமாக விளங்குகிறது. இந்த ஆலயத்தில் நாயக்கர் காலச் சிற்பங்களும் ஓவியங்களும் கண்ணுக்கு விருந்தாவதோடு கலைப்பொக்கிஷங்களாகவும் விளங்குகின்றன.


இங்கு கருவறையின் அருகிலேயே சுயம்பு ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார். இந்த ஆஞ்சநேயர் உக்கிர ஆஞ்சநேயர் என்கிறார்கள். ஒரே கல்லில் உருவான மூர்த்தி இவர். வாலில் மணியும் கையில் தாமரை மலரும் ஏந்தியும் மற்றொரு கரத்தில் அபய முத்திரையும் காட்டி அருள்கிறார் ஆஞ்சநேயர். இந்த அனுமன் உக்கிர மூர்த்தியாக அருள்வதால் இவரின் உக்கிரத்தைத் தணிக்கும் வண்ணம் எதிரே சங்கு சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தலத்தில் சித்ரா பௌர்ணமி திருவிழா, ஆனிப்பூரம், புரட்டாசி பிரம்மோற்சவம், வைகுண்ட ஏகாதசி, ராப்பத்து உற்சவம் உள்ளிட்டவை மிகவும் விசேஷமாக நடைபெறும். சித்ரா பௌர்ணமியை ஒட்டி அழகர்கோ யிலிலிருந்து பல்லக்கில் புறப்படும் அழகர், பிரசன்ன வேங்கடாசலபதி பெருமாள் திருக்கோயிலில் எழுந்தருள்வார்.

இங்குதான் திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் சந்நிதியிலிருந்து வரும் மாலை அணிவிக்கப்பட்டு, அபிஷேக, ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆராதனைகளை ஏற்கும் அழகர் தங்கக் குதிரை வாகனத்தில் மறுநாள் காலையில் வைகை ஆற்றில் இறங்குவார். புரட்டாசி பிரம்மோற்சவமும் இந்த ஆலயத்தில் விசேஷமாக நடைபெறும். இங்கு பக்தர்கள் புரட்டாசி மாதம் விரதம் இருந்து வழிபாடுகள் செய்வார்கள்.

பிரசன்ன வேங்கடாசலபதிப் பெருமாளை வணங்கினால் திருப்பதி சென்று வணங்கிய பலன் கிடைக்கும். திருப்பதி சென்று நேர்த்திக்கடன் செலுத்த முடியாதவர்கள் இங்கு தங்கள் வேண்டுதல்களைச் செலுத்தலாம்.

# அன்னை மீனாட்சி திருகல்யாணத்தை காண செல்லும் திருப்பரங்குன்றம் முருகப்பெருமான்



உலகப்புகழ் பெற்ற மதுரை சித்திரைத் திருவிழா சைவம் வைணவ ஒற்றுமைக்குக்கு எடுத்து காட்டாக உள்ளது. ஆண்டு தோறும் நடைபெறும்

அன்னை மீனாட்சி அம்மன் திருகல்யாணத்தை காண உலகில் உள்ள அனைத்து சிவபக்தர்கள் மதுரையில் ஒன்று கூடுகின்றனர். அதேபோல் ஆறுபடைபடை வீட்டின் முதல் வீடாக உள்ள திருப்பரங்குன்றத்தில் உள்ள அழகு முருகன் வள்ளி தெய்வானையுடன் அன்னையின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க இப்போதும் திருப்பரங்குன்றம் கோவிலில் இருந்து

மீனாட்சி அம்மன் கோவிலுக்கு செல்லும் புறப்படும் நிகழ்ச்சி உள்ளது. அதேபோல் பங்குனி உத்திர திருவிழா விழாவில் நடைபெறும் அன்னை மீனாட்சியின் புதல்வர்

முருகன் தெய்வானை திருகல்யாண நிகழ்ச்சியில் பங்கேற்க ஆண்டு தோறும் மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து முக்கிய வீதிகள் வழியாக

மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு செல்லும் நிகழ்ச்சி நடைபெற்றுவருகிறது. ஆறுபடை வீடுகளில் முதல் படை திருப்பரங்குன்றமும்

ஆறுவதுபடை வீடு அழகர் மலைமேல்

சோலைமலை யாக உள்ளது. மன்னர்கள் காலத்தில் சைவம்

வைணவ ஒற்றுமைக்கு திகழ்ந்த மதுரை சித்திரைத் திருவிழா இப்போது அனைத்து மத மக்களும் ஒற்றுமையுடன் காணும் நிகழ்ச்சியாக சித்திரை திருவிழா உள்ளது. இதில் குறிப்பாக அன்னை மீனாட்சி அம்மன் மாசி வீதிகளில் வலம்வரும் போது இஸ்லாமிய ஆண்கள் பெண்கள்

வரவேற்று பக்தர்கள்

தாகத்தை போக்கும் வகையில் குளிர்பானங்கள் வழங்குகின்றனர்.அன்னை மீனாட்சியை

வரவேற்க்கும் ஜமாத் நிர்வாகிக்கு மீனாட்சி அம்மன் மாலை இன்று வழங்கி கௌரவிக்கபடுகிறது. அதேபோல் உலகிலேயே முதல் பேரரசியாக அன்னை மீனாட்சியே மக்களுக்கு எவ்வித இன்னல்கள்யின்றி ஆட்சி புரிந்து உள்ளார். இதை இன்றும் சித்திரை திருவிழாவின் போது

அன்னை மீனாட்சிக்கு பட்டாபிஷேகம் சூட்டப்பட்டு திக் விஜயம் நிகழ்ச்சியும் நடைபெற்று வருகிறது .ஐந்தாயிரம் ஆண்டுகளாக கோவில் மாநகரமாக தொடர்ந்து இயங்கி வரும் சிறப்பை மதுரை பெற்று உள்ளது.


SREE JANAKI TOURS
DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS
DOMESTIC & INTERNATIONAL

SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
● KOLLUR, UDUPI TOUR ● KERALA TEMPLE TOUR
● SHIRIDI, MANTRALAYAM ● NAVAGRAHA TOUR
● KASI, GAYA, ALLAHABAD & PURI ● AHOBILAM & HILL STATION

ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
● THIRUVANNAMALAI GIRIVALAM ● SRIPURAM GOLDEN TEMPLE
● SURUTAPALLI PRADASHOM ● SAKTHI TOUR
● THENNANGUR ● KANCHIPURAM & BALAJI DARSHAN

NEW 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092 (OPP JAINS KENCES RETREAT)
PHONE: 9094279625 / 9444465924 e-mail: srijanaki.tours@gmail.com

# சங்கடங்களை தீர்க்கும்
# மதுரை தெப்பக்குளம் மாரியம்மன்



மாரியம்மன் வெவ்வேறு பெயர்களில் தமிழகம் மட்டுமின்றி பல மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் அருளாசி செய்து வருகிறார். பெயர் வெவ்வேறாக இருந்தாலும், அம்மா என்று அம்மனை வேண்டி அழைத்தால் தன்னுடைய குழந்தைக்கு தேவையான சேவையை செய்வதற்கு ஓடோடி வருபவராக விளங்குகிறார்.

அது போலத்தான் மதுரை வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள தெப்பக்குளத்தின் கரையில் குடிகொண்டு, மக்களின் காவல் தெய்வமாக சங்கடங்களைத் தீர்த்து அருள்பாலித்து வருகிறாள் மாரியம்மன்.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட் டில் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் நிர்வாகத்துக்குட்பட்டது வண்டியூர் தெப்பக்குளம் மாரியம்மன் கோயில்.ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மதுரை மாநகரை கூன்பாண்டியன் என்ற மன்னன் ஆட்சி புரிந்தார். அப்போது, மதுரையின் கிழக்கே தற்போது கோவில் அமைந்துள்ள பகுதி மகிழம் மரங்கள் நிறைந்த காடாக இருந்தது.

அதனை திருத்தி, அருகே வைகை ஆற்றில் கிடைத்த அம்மனை தெற்கு கரையில், தற்போது கோயில் அமைந்துள்ள பகுதியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாக அறியப்படுகிறது. மாரியம்மன், துர்கையும் என வெவ்வேறு வடிவமாக இருந்தபோதும், இருவரும் அம்பிகையின் அம்சமாகவே திகழ்கின்றனர்.

இதனை உணர்த்தும் வகையில், மாரியம்மன் கைகளில் பாசம், அங்குசம் ஏந்தி, இடது காலை தொங்கவிட்டு வலது காலை மடக்கி வைத்திருக்கிறார். துர்கை அம்மனின் இடது காலுக்கு கீழே எருமைத்தலை உள்ளது.மதுரையை ஆட்சி செய்த மன்னர்கள் போருக்கு செல்லும் முன் வீர தீரத்துடன் செயல்படவும், போரில் வெற்றி பெறவும், அம்மனை வணங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

பிற்காலங்களில் இந்த அம்மனே மதுரையின் எல்லைக்காவல் தெய்வமாகவும், தெப்பக்குளம் மாரியம்மன் ஆகவும் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறாள். மதுரை மன்னராக திருமலை நாயக்கர் இருந்த போது, தற்போது திருமலை நாயக்கர் மகால் என அழைக்கப்படும் அரண்மனையை கட்டுவதற்கான மணல் இங்கிருந்து தோண்டப்பட்டது. அப்படி மணலை தோண்டியதால் ஏற்பட்ட பள்ளத்தை, சதுர வடிவ தெப்பக்குளமாக மாற்றினார். தமிழகத்தின் மிகப்பெரிய தெப்பங்களில் இதுவும் ஒன்று.

இதன் நடுவிலுள்ள நீராழி மண்டபத்தில் மரங்களுடன் கூடிய விநாயகர் கோயில் ஒன்றும் உள்ளது.தெப்பக்குளத்துக்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வருவதற்கு சுரங்கக் குழாய்கள் மூலம் வழிகள் ஏற்படுத்தப்பட்டன.இந்த தெப்பம் தோண்டும்போது கிடைத்த விநாயகர் சிலையே மீனாட்சி அம்மன் கோயிலில் முக்குறுணி விநாயகராக பிரதிஷ்டை செய்யப்பட்டது.தைப்பூசத் தன்று மீனாட்சி அம்மனுக்கும், சுந்தரேசுவரருக்கும் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது.

இத்தெப்பத் திருவிழாவைக் காண லட்சக்கணக்கான மக்கள் திரண்டு மதுரைக்கு வருவார்கள்.இங்கு அம்மனே பிரதானம் என்பதால், வேறு பரிவாரத் தெய்வங்கள் இல்லை. அரசமரத்தின் அடியில் விநாயகர் மற்றும் பேச்சியம்மன் உள்ளனர்.அம்மைநோய், தோல் நோய்கள், குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள், தீராத நாள்பட்ட நோய்கள், குடும்ப பிரச்சினைகள், தொழில் பிரச்சினைகள் தீர பக்தர்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

திருமணத்தடை நீங்கவும், குழந்தைப்பேறு கிடைக்கவும் வேண்டுதல் செய்து நேர்த்தி செய்கின்றனர். வேண்டிய காரியங்கள் நிறைவேறினால் அம்மனுக்கு அக்னிச்சட்டி, பால் குடம், மாவிளக்கு எடுத்து நேர்த்திக்கடனை நிறை வேற்றுகின்றனர்.அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படும் தீர்த்தத்தை பருகினால் சகல நோய்களும் நீங்கும் என்பதால், பக்தர்கள் தீர்த்தம் வாங்கிச் செல்கின்றனர். மேலும், பக்தர்கள் எலுமிச்சை தீபமேற்றியும் வழிபடுகின்றனர். உள்ளம் உருகி வேண்டி நிற்கும் பக்தர்களின் சங்கடங்களை தீர்த்தருளும் மகாசக்தியாக விளங்குகிறார் தெப்பக்குளம் மாரியம்மன்.



aanmeegamalar.com

# ராகு கேது தோஷங்கள் போக்கும் திருமோகூர் காளமேகப் பெருமாள்



திருமோகூர் திருத்தலம் 108 திவ்ய தேசங்களுள் 46வது திவ்ய தேசமாக திகழ்கிறது. இங்கே காளமேகப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் நமக்குக் காட்சி தருகிறார்.

பாற்கடலில் அமிர்தம் கடையும் போது அதிலிருந்து ஒரு துளி அமிர்தம் இக்கோயிலில் உள்ள குளத்தில் விழுந்ததால், இக்கோயில் குளத்திற்கு பெரிய திருப்பாற்கடல், சிறிய திருப்பாற்கடல் என்ற பெயர் உண்டானது.

காளமேகப்பெருமாள் கிரீடம், சங்கு, சக்கரம் ஆகியவை வெண் கற்களால் செய்து அணிவிக்கப்பட்டுள்ளது. பெருமாளுக்கு சாளகிராம மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. சாளகிராமம் என்பது இமய மலையில் கிடைக்கும் ஒரு புனிதமான கல்.

இதனை மகாவிஷ்ணுவின் வடிவமாகவே பூஜிக்கின்றனர். சாளகிராமத்தை வீட்டில் வைத்து பூஜை செய்வது சிறந்த புண்ணிய பலன்களைத் தரும்.

அளவற்ற சக்தி வாய்ந்த சுதர்சன சக்கரம் இக்கோயிலில் உள்ளது. ஒருபுறம் ஸ்ரீ யோக நரசிம்மர், மறுபுறம் ஸ்ரீ சக்கரத்தாழ்வார்.

இக்கோயிலில் சக்கரத்தாழ்வாருக்கு சிறப்பு பூஜைகள், அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இங்கே சக்கரத்தாழ்வார், 16 கைகளுடனும், 16 வகையான ஆயுதங்களுடனும் காட்சி தருகிறார்.

நரசிம்மர் சங்கு சக்கரத்துடன் காட்சி தருகிறார். சக்கரத்தாழ்வார் சன்னதியில், ஒரு கல்லில் சக்கரத்தாழ்வாரை சுற்றி 154 எழுத்துக்களும், 48 கடவுள்கள் உருவங்கள், 6 வட்டங்களுள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் சக்கரத்தாழ்வாரின் பிறந்தநாள் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.*

இந்தத் திருத்தலம் நவக்ரஹ தோஷங்களை போக்கக் கூடிய ஸ்தலம். இதற்கு ஸ்ரீ மோகன க்ஷேத்திரம் என்ற பெயர் உண்டு. திருமோகூர் ராகு கேது ஸ்தலமாகும். ராகு கேதுவினால் உண்டாகும் தோஷங்களுக்கு திருமோகூர் பரிகார ஸ்தலமாக விளங்குகிறது.

கோயில் அமைவிடம்: மதுரை, மேலூர் வழித்தடத்தில் மதுரையிலிருந்து 10 கி.மீ தொலைவில், இந்த அழகிய காளமேகப் பெருமாள் வீற்றிருக்கும் திருமோகூர் அமைந்துள்ளது. மதுரை மாட்டுத் தாவணி பேருந்து நிலையத்திலிருந்தும், பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்தும் நிறைய பேருந்துகள் இங்கே செல்கின்றன. மதுரையிலிருந்து ஒத்தக்கடை சென்று, அங்கிருந்து ஆட்டோவிலும் இந்த கோயிலுக்கு செல்லலாம்.

மாட்டுத் தாவணி பேருந்து நிலையத்திலிருந்து 7 km தொலைவிலும், பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 15 km தொலைவிலும், யானைமலை ஒத்தைக்கடை என்னும் ஊரில் இருந்து 2 km தொலைவிலும் அமைந்துள்ளது இந்த திருமோகூர் திருத்தலம். 5.1.22.

gsspecialfood.com

கீதாசமையல்

# gsspecialfood

ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி

**தரமாக, சுத்தமாக, கலப்படமின்றி தயாரிக்கப்பட்டது.**
**எந்தவித இரசாயண கலவையும் பயன்படுத்தாமல் தயாரிக்கப்பட்டது**
(இட்லி பொடியில் பூண்டு சேர்க்காமல் தயாரிக்கப்பட்டது)

**சத்துமாவு**
41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது

**கருப்பு உளுந்து** கஞ்சிமாவு

**சின்ன வெங்காய வடகம்**

**புளிசாதப் பொடி**

**வெயிட் லாஸ் கஞ்சி மாவு**

வல்லாரை கீரை இட்லிபொடி

கறிவேப்பிலை இட்லிபொடி

தூதுவளை கீரை இட்லிபொடி

கொள்ளு இட்லிபொடி

முடக்கத்தான் கீரை இட்லிபொடி

எள் இட்லிபொடி

பூண்டு இட்லி பொடி

**நலங்கு மாவு**
35 வகை மூலிகைகளில் தயாரிக்கப்பட்டது (வெயிலுக்கு குளிர்ச்சி தரும், பெண்கள் மட்டும்)

மேற்கண்ட பொருட்கள் தேவைப்படுபவர்கள் கீழ்காணும் வாட்சப் எண்ணில் மெசேஜ் செய்து பெற்றுக்கொள்ளவும்

gsspecialfood.com

**7550199561**

fssai REGISTRATION 22424543000080



# gsspecialfood


கீதாசமையல்

ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி



வல்லாரை கீரை இட்லிபொடி
100 கிராம் ரூ.70

கறிவேப்பிலை இட்லிபொடி
100 கிராம் ரூ.50



தூதுவளை கீரை இட்லிபொடி
100 கிராம் ரூ.70

கொள்ளு இட்லிபொடி
100 கிராம் ரூ.50



முடக்கத்தான் கீரை இட்லிபொடி
100 கிராம் ரூ.70

பிரண்டை இட்லிபொடி
100 கிராம் ரூ.80



எள் இட்லிபொடி
100 கிராம் ரூ.50

பூண்டு இட்லிபொடி
100 கிராம் ரூ.70



புளிசாதம் பொடி
100 கிராம் ரூ.70

வெங்காய வடகம்
200 கிராம் ரூ.150




கருப்பு உளுந்து கஞ்சி மாவு
250 கிராம் ரூ.140



weight loss kanji mix
250 கிராம் ரூ.140

நலங்கு மாவு
200 கிராம்
ரூ.200




gsspecialfood.com

மேற்கண்ட பொருட்கள் தேவைப்படுபவர்கள் கீழ்காணும் வாட்சப் எண்ணில் மெசேஜ் செய்து பெற்றுக்கொள்ளவும்

7550199561

gsspecialfood.com

சத்துமாவு
41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது
250 கிராம்
ரூ.180



## 64 திருவிளையாடல் புராணங்கள்

# நிகழ்ந்த மதுரை மீனாட்சி ஆலயம்



மீனாட்சி அம்மன் விக்ரகம் மரகதக் கல்லால் ஆனது. ஏனென்றால் பொதுவாக அன்னையி ன் திருமேனி பச்சை நிறம்.

அன்னையின் வலது கால் சற்று முன் நோக்கி இருக்கும், ஏனென்றால் பக்தர்கள் அழைத்தா ல் உடனே ஓடி வருவதற்காக.

அன்னை கையில் ஏந்திய கிளி அன்னையின் காதில் பேசுவது போல் இருக்கும் ஏனென்றா ல் கிளி பேசுவதை திருப்பி பேசும் அதைப் போல் பக்தர்களின் வேண்டுதலை திரும்பத் திரும்ப அன்னையிடம் சொல்லும் இதனால் நமது வேண்டுதல் விரைவாக நிறைவேறும்.

அன்னையின் விக்ரகம் சுயம்பு ஆகும் சில ஆலயத்தில் லிங்கம் சுயம்புவாக இருக்கும் ஆனால் மதுரையில் மீனாட்சி உக்ரபாண்டிய னுக்கு முடிசூட்டிய பின் சொக்கநாதர் பெருமா ன் அருகில் விக்ரகமாக நின்றுவிட்டாள் அதனால் சுயம்பு அன்னை.

அன்னை மதுரையில் யாகசாலையில் அக்னி யில் அவதரித்தாள். இவளின் இயர்பெயர் தடாதகை அங்கயற் கண்ணிஆகும்.

பாண்டிய மகாராஜாவுக்கும் மஹாராணி காஞ்சனமாலைக் கும் ஒரே மகள். அதனால் பாண்டிய நாட்டின் பேரரசி ஆவாள்.

இங்கு கற்பகிரகத்தில் அன்னையின் விக்ரக ம் உயிருடன் இருக்கும் ஒரு பெண்ணை பார்ப்பது போல் இருக்கும்.

அன்னையே சிலையாக இருப்பதால் மிகவும் அழகாக இருக்கும் இவளை பார்த்து கொண்டே இருக்க வேண்டும்போல் இருக்கும்.

அன்னையின் சிலை மிகவும் நளினமாக இருக்கும் அன்னையின் சன்னதியில் தாழம்பூ குங்குமம் பிரசாதமாக தரப்படும்.

மதுரையில் அன்னைக்கே முதல் மரியாதை. இங்கு அம்பிகையை முதலில் வணங்க வேண்டும். பின்னர் தான் சுவாமியை தரிசிக்க வேண்டும்.

மீனாட்சி சுந்தரேஸ்வரர் மதுரையை அன்றும் இன்றும் என்றும் ஆட்சி செய்வார்கள் என்பது சிவவாக்கு. இங்கு எம்பெருமான் 64 திருவிளையாடல் புரிந்து உள்ளார். வேறு எந்த ஆலயத்திலும் இத்தனை திருவிளையாடல் புரிந்தது இல்லை.

அனைத்து சிவ ஆலயமும் முக்தியை தரும் ஆனால் சிவ ஆலயத்தில் சகல செல்வமும் தரும் கோவில். மீனாட்சி சுந்தரேஸ்வரர் வாழ்ந்ததால் மதுரைக்கு வந்தாலே முக்தி.

இந்த கோவில் அம்மன் பெயரில் அழைக்கப்படுகிறது. உலகின் பெரிய அம்மன் கோவில். சக்தி பீடமும் ஆகும்.

வாழ்நாளில் ஒருமுறையாவது தரிசிக்க வேண்டிய ஆலயம். சித்திரை திருவிழா அன்னைக்கும் ஆவணிமூல பெருவிழா சுவாமிக்கும் நடக்கும். மிகவும் அழகான கோபுரங்கள் கொண்ட கோவில்.



கீதாசமையல்
gsspecialfood
ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி
gspecialfood.com
கீழ்காணும் பொருட்கள் தேவைப்படுபவர்கள் கீழ்காணும் வாட்சப் எண்ணில் மெசேஜ் செய்து பெற்றுக்கொள்ளவும்
7550199561
fssai REGISTRATION 22424543000080
gsspecialfood.com

சத்துமாவு
41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது
கருப்பு உளுந்து கஞ்சிமாவு
சின்ன வெங்காய வடகம்
புளிசாதப் பொடி
வெயிட் லாஸ் கஞ்சி
வல்லாரை கீரை இட்லிபொடி
கறிவேப்பிலை இட்லிபொடி
தூதுவளை கீரை இட்லிபொடி
கொள்ளு இட்லிபொடி
முடக்கத்தான் கீரை இட்லிபொடி
எள் இட்லிபொடி
பூண்டு இட்லி பொடி



தமிழகத்தில் மிகப்பெரிய விழா நடக்கும் முதல் ஆலயம். சைவமும் வைணவ சமயமும் ஒன்றாக கொண்டாடும் விழா.

உலக அதிசியங்களுள் ஒன்று மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் என்றே கூறலாம். இவளை சரண் அடைந்தால் நம்மை காப்பாள் அன்னை மீனாட்சி. நவராத்திரி 4ம் நாள் அன்று நமது சிவகங்கை விஸ்வநாதர் ஆலயத்தில் விசாலாட்சி மீனாட்சி அம்மன் அலங்காரத்தில் அருள்பாலிக்கிறார்.

மதுரையில் மீனாட்சி தினமும் 8 விதமான சக்திகளாகப் பாவிக்கப்பட்டு ஆராதிக்கப் படுகிறாள். இது மற்ற கோவில்களில் இல்லாத ஒரு சிறப்பு.

அன்னைக்கு 5 கால பூஜைகள் நடக்கும். காலையில் சின்ன பெண் போன்ற அலங்காரம், உச்சி காலத்தில் மடிசார் புடவை, மாலை நேரத்தில் தங்க கவசம், வைரக்கிரீடம் போன்ற அலங்காரங்கள். இரவு அர்த்த ஜாமத்தில் வெண்பட்டாலான புடவை என்ற அலங்காரங்களுடன் அன்னையைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும்.

எல்லா கோவில்களும் போல இங்கும் பள்ளியறை அம்மன் சன்னதியில் இருக்கிறது. இரவு சுந்தரேஸ்வரரது வெள்ளிப் பாதுகைகள் ஸ்வாமி சன்னதியில் இருந்து பள்ளியறை வரும். பாதுகைகள் வந்த பின் அன்னைக்கு விசேஷ ஹாரதி (மூக்குத்தி தீபாராதனை ) நடக்கிறது.

அதன் பின்னர் அம்பிகையின் சன்னதி மூடப்பட்டு பள்ளியறையில் பூஜை, பால், பழங்கள், பாடல்கள், வாத்ய இசை என்று சகல உபசாரங்களுடன் இரவு கோவில் நடை சாத்தப்படுகிறது.

மதுரையில் பள்ளியறை பூஜை பார்க்கப் பார்க்கத் திகட்டா காட்சி. பள்ளியறை பூஜை சிவ ஸ்ரீ சக்தி ஐக்யத்தை உணர்த்துவதால் இந்த தரிசனத்திற்கு சிறப்பு அதிகம்.

மேலும் கணவன் மனைவி ஒற்றுமைக்கு மதுரை மீனாட்சி கோவிலில் தினமும் நடைபெறும் பள்ளியறை பூஜையை தரிசித்தல் நல்ல பயனைக் கொடுக்கும்.

பிள்ளை இல்லாதவர்கள் காலையில் மீனாட்சியின் சிறுபிள்ளை அலங்காரத்துடன் நடக்கும் ஆராதனையை தரிசித்து மனமுருகி வேண்டினால் கட்டாயம் பலன் தருவாள் அன்னை என்கின்றனர்.

வியாபார நஷ்டம் தொழில் மற்றும் வேளையில் பிரச்சனை உள்ளவர்கள் அன்னையின் வைர கிரீட அலங்காரம் கண்டு முன்னேற்றம் பெறலாம்.

மீனாட்சி அம்மன் சிலை பச்சை மரகத கல்லிலால் ஆனது. கருவறை பக்கம் மேளம் நாதஸ்வரம் போன்ற இசைகருவிகளை இசை க்க மாட்டார்கள். கல் என்றாலே கடினமானது என்று சொல்வார்கள். மரகதகல் மென்மை யானது. மேளம் நாதஸ்வரம் போன்ற இசை கருவிகளை இசைக்கும் போது வரும் ஒலி அதிர்வுகளை தாங்கி கொள்ள முடியாதது. அப்படிப்பட்ட ஒரு கல்லை (ஒலி அதிர்வுகளை கூட தாங்க முடியாத) உளியால் செதுக்கி மீனாட்சி அம்மன் சிலை செய்து இருக்கிறார்கள்...


ஸ்ரீ வராஹி மந்திர ஜெபத்தால்
நல்லதே நடக்கும்
மனமகிழ்ச்சி கிடைக்கும்

தீராத மன குழப்பம், திருமண தடை, புத்திபாக்கிய தடை, தொழில் வளர்ச்சியடைய, எதிரிகள் தொல்லை நீங்க, வாழ்வில் வளம் பெற ஸ்ரீ வராஹி மந்திர ஜெபத்தால் தொடர் நன்மைகள் கிடைக்கும்.



பக்தர்களுக்காக தினந்தோறும் காலை மற்றும் மாலை ஜெபிக்கப்படுகிறது.

வேம்பத்தூர் ஸ்ரீ கவிராஜ பண்டிதரின்
ஸ்ரீவராஹிபீடம் அறக்கட்டளை
226, பெருமாள் கோவில் தெரு
வேம்பத்தூர் சிவகங்கை மாவட்டம்-630 565
செல் 9894142409

# தேனூரிலிருந்து மதுரைக்கு மாறிய

# கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வு



சித்திரை திருவிழா நமக்கு கிடைத்த விபரமும் அதன் உள்ளே திருவிழாவை நமக்கு விட்டு கொடுத்த ஒரு கிராமத்தின் பெருமைமிக்க வரலாறு தெரியுமா*...!

கிபி 1650க்கு முன்பு வரை கள்ளழகர் மதுரை வைகை யாற்றில் இறங்கவில்லை. மதுரை சோழவந்தான் அருகிலுள்ள தேனூர் வைகையாற் றில் தான் ஆயிரம் ஆண்டுக ளுக்கும் மேலாக கள்ளழகர் எழுந்தருளி வந்தார்.

கிபி 1650 காலகட்டத்தில் மதுரையை ஆட்சி செய்த மன்னர் திருமலை நாயக்கர் சைவ, வைணவ சமயத்தை ஒன்றினைக்கும் விதமாகவும்,நிர்வாக காரணங்களுக்காகவும் மாசி மாதத்தில் நடந்த

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத் தை சித்திரையில் தேனூர் வைகை ஆற்றில் இறங்கிய அழகர் விழாவுடன் இணைத்து சித்திரையில் மதுரைக்கு மாற்றினார்.

அதற்கு முன்பு வரை கள்ளழகர் அழகர் மலையிலிருந்து கிளம்பி அலங்காநல்லூர், கோட்டைமேடு வழியாக சித்திர பௌர்ணமி அன்று தேனூர் வைகையாற்றில் இறங்கி வந்தார்.

அப்படி தேனூர் வரும் அழகரை இப்போது மதுரை வைகை ஆற்றில் இறங்கும் அழகரை கூடலழகபெருமாள் எதிர்கொண்டு வரவேற்பதுபோல அப்போது குருவித் துறையில் உள்ள சித்திர ரத வல்லப பெருமாள் மன்னாடிமங்கலம், சோழவந்தான், திருவேடகம் வழியாக வந்து அழகரை தேனூரில் எதிர்கொண்டு அழைப்பார்.

மேலும் அப்போது அழகர் ஆற்றில் குதிரை வாகனத்தில் இறங்க மாட்டார். ஆயிரம் பொன் சப்பரம் என்று சொல்லக் கூடிய தங்க சப்பரத்தில் தான் அழகர் ஆற்றில் இறங்கினார்.

ஆற்றில் இறங்கிய அழகர் ஒருநாள் முழுவதும் ஆற்றுக்குள் இருந்து விட்டு பின்னர் சித்திர பௌர்ணமி மறுநாள் காலை சேஷ வாகனத்தில் தேனூரை வலம் வருவார்.

அதன்பின் தேனூரில் உள்ள திருபாற்கடல் என்னும் இடத் திற்கு சென்று அங்கு கருட சேவைக்கு மாறி மண்டுகமாக (தவளையாக) உள்ள சுதபஸ் முனிவருக்கு சாபவிமோசனம் அளிப்பார்.

பின்னர் மீண்டும் அலங்காநல்லூர் வழியாக தங்க சப்பரத்தில் அழகர் மலையை அடைந்து வந்துள்ளார்.

குறிப்பு: முன்பு நடைபெற்ற திருவிழாவில் அழகருக்கு குதிரை வாகனம் கிடையாது.அப்போது ஆயிரம் பொன் சப்பரம்,சேஷ வாகனம், கருட வாகனம் மட்டுமே இருந்துள்ளது

இவ்விழா மதுரைக்கு மாற்றப்பட்ட பிறகு கள்ளழகர் தல்லாகுளம் வழியாக வரத் தொடங்கினார்.

தற்போது தல்லாகுளம் பெருமாள் கோவிலில் நடைபெறும் விழாகள் யாவும் முன்பு தேனூரில் உள்ள பழமையான அழகுமலையான் கோவிலில் நடைபெற்றவையே

தேனூரில் இருந்து திருவிழா மாற்றியமைக்கப்பட்டு 370 வருடங்களுக்கு மேலாகியும் இப்போதும் மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் நாளில் தேனூரும் அதனை சுற்றியுள்ள கிராம மக்களும் பழமையை மறக்காமல் தேனூர் வைகை ஆற்றிலேயே முடி காணிக்கை செலுத்தி வழிபடுகின்றனர்

திருவிழா மதுரைக்கு மாற்றியமைக்கப்பட்ட பிறகு மதுரை மீனாட்சியின் அண்ணனான அழகர் தங்கையின் திருமணத் திற்கு வருவதாகவும், வருவதற்குள் திருமணம் முடிந்து விடவே ஆற்றிலிருந்து அப்படியே திரும்பி விடுவ தாகப் புதிய கதை ஒன்று புனையப்பட்டது.

ஆனால் உண்மையான புராண வரலாற்றின்படி முற்காலத் தில் தேனூரில் வாழ்ந்த விஷ்ணு பக்தரான சுதபஸ் என்னும் முனிவர் சிற்றாற்றில் நீராடிக்கொண்டிருந்தபோது துர்வாச முனிவர் அவரை காண வந்துள்ளார்.அப்போது துர்வாசமுனிவரை கவனிக்காமல் நீராடிப் பூஜைகளை முடித்து விட்டு பின் காலந்தாழ்த்தித் துர்வாசரை கவனித்து வரவேற்க வந்தார் சுதபஸ் முனிவர்.அதனால் சினங்கொண்ட துர்வாச முனிவர் மண்டுகமாக (தவளையாக) கடவாய் என சபித்துவிட சுதபஸ் முனிவர் தவளையானார்.

அதன்பின் சாபவிமோசனம் கேட்ட சுதபஸ் முனிவரிடம் உனது ஊரில் உள்ள வைகை ஆற்றில் அழகரை நினைத்து தவம் செய் சித்திர பௌர்ணமி மறுநாள் அழகர் உனக்கு

காட்சி தந்து சாபவிமோசனம் அளித்து அங்கே உன்னோடு ஆற்றில் இருக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் மோட்சம் அளிப்பார் எனக் கூறினார்.இதுவே திருமலை நாயக்கர் காலத்துக்கு முன் பிருந்த பழைய புராணம்.

இப்போது நடக்கும் சாபவிமோசன விழாவில் நாரை (கொக்கு) பறக்கவிடுவதற் கான காரணம், நீருக்கடியில் தவளையாக உள்ள சுதபஸ் முனிவரை தவளை என நினைத்து நாரை (கொக்கு) உண்ண வரும்போது கள்ளழகரின் அருளால் சுதபஸ் முனிவர் மோட்சம் அடைந்து மனித உருவத்தை அடைகிறார்.



தவளை மனித னாக மாறுவதை கண்டு நாரை பயந்து செல்வதாக காட்சிப்படுத்தவே தேனூர் மண்டபத்தில் நாரை பறக்க விடப்படுகிறது.

இப்படி ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த தேனூர் திருவிழா மதுரைக்கு மாற்றப்பட்டதை பெரும்பாலான தேனூர் மக்கள் விரும்பவில்லை. இருந் தாலும் மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்கி தேனூர் மக்கள் திருவிழாவை விட்டு கொடுக்க சம்மதித்தனர்.

இதனால் தேனூர் மக்களை சமாதானப்படுத்தவும் கௌரவிக்கவும் மன்னர் திருமலை நாயக்கர் மதுரைக்கு மாற்றியமைக்கப்பட்ட திருவிழாவின் முதல் நிகழ்வாக கொடியேற்ற மூகூர்த்த விழாவை தேனூரில் உள்ள அழகு மலையான் கோவிலில் ஏற்படுத்தி அழகர் மதுரைக்கு கிளம்புவதற்கு முன் தேனூர் வைகை ஆற்றிலிருந்து தேனூர் மக்களால் தீர்த்தம் கொண்டு வந்து அபிஷேகம் செய்த பின்னரே அழகர் மதுரைக்கு கிளம்புவதாக விழாவை ஏற் பாடு செய்தார்.

அதன்பின் மீனாட்சி அம்மன் கோவில் பகுதிக்கு அருகில் உள்ள மதுரை வைகை ஆற்றின் நீரோடும் பாதையில் மலர் ஒன்றை நீரில் விட்டு அந்த மலர் சென்று நின்ற இடமான வண்டியூர் வைகை ஆற்றின் நடுவே தேனூரின் பெயரில் தேனூர் மண்டபம் என்று ஒரு மண்டபத்தை அமைத்து தேனூரில் நடைபெற்ற மண்டூக முனிவரின் சாபவிமோசனம் விழாவை அங்கு நடத்த ஏற்பாடு செய்தார்.

மேலும் அந்த மண்டபத்தில் தேனூர் மக்களுக்கு முதல் மரியாதை அளித்து அழகர் தேனூரை வலம் வந்ததை குறிக்கும் விதமாக

(தேனூர் மண்டபத்தை மூன்று முறை) வலம் வர செய்து கொடுத்து அதனை செப்புப்பட்டயமாகவும் வழங்கினார்.

(மதுரை சித்திரை திருவிழாவில், தேனூர் மக்களுக்கு அழகர்கோவில் நிர்வாகத்தால் முதல் மரியாதை செய்யப்பட்டு தேனூர் மண்டபத்தை அழகர் மூன்று முறை வலம் வருவது தற்போதும் நடைமுறையில் உள் ளது)

தேனூர் மண்டபத்தின் சிறப்பு சித்திரை திருவிழாவில் அழகர் எழுந்தருளும் மண்டகப்படி அனைத்திற்கும் அதன் மண்டகப்படிக்காரர்கள் வரி செலுத்தி வர வேற்பார்கள்.

ஆனால் தேனூர் மண்டகப்படிக்கு மட்டும் அழகர் தேனூர் மக்களுக்கு வரி செலுத்தி அருள்புரிகிறார்.

மேலும் தற்போது நடைபெறும் சித்திரை திருவிழாவில் மீனாட்சியம்மன் கோவில் கொடியேற்றத்திற்கு முன்பாகவே அழகர் கோவில் மற்றும் மீனாட்சியம்மன் கோயில் திருவிழா பத்திரிகைகள் தேனூர் மண்டபத்தில் வைத்து பத்திரிகைகள் பரிமாற்றம் செய்து திருவிழாவிற்கு இருகோயில்களுக்கு இடையே அழைப்பு விடப்படுகிறது.

## அழகர்கோவில் அழகருக்கும் தேனூருக்கும் உள்ள தொடர்பு

தேனூர் கிராமம்தான் அழகர்கோவிலுக்கு பாத்தியப்பட்ட கிராமங்களில் முதன்மையான தாய் கிராமம்.தேனூர் இன்றள வும் அழகரின் திருநாம பெயரான சுந்தரராஜ பெருமாள் என்னும் பெயரிலேயே தேனூர் சுந்தரராஜன் பூமி என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இன்றளவும் விவசாய பூமியான தேனூரின் தை மாதத் தில் முதல் அறுவடை நெற்கதிர்கள் அழகருக்கு காணிக்கையாக செலுத்தப்படுகிறது.இதற்கு நெற்க்கோட்டை கட்டுதல் என அழைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பல்வேறு தொடர்புகள் அழகர்கோவில் சுந்தர ராஜ பெருமாளுக்கும் தேனூருக்கும் இன்றளவும் இருந்து வருகின்றது.





# கல் ஸ்ரீசக்கரம் உள்ள ஸ்தலம், சிவனே சிவனை பூஜித்த ஸ்தலம், மறுபிறப்பை போக்கும் சக்தி வாய்ந்த ஸ்தலம்




மதுரை மாநகரின் மையப் பகுதியில், தெற்கு மாசி வீதி மேலமாசி வீதி இணையும் சந்திப்பில் இம்மையிலும் நன்மை தருவார் கோயில் அமைந்துள்ளது. மக்கள் இப்பிறப்பில் செய்த பாவங்களை சிவபெருமான் இந்த பிறப்பிலேயே மன்னித்து நன்மை தருவதால் இக்கோவில் மூலவர் சொக்கநாதரை, இம்மையிலும் நன்மை தருவார் என்று அழைக்கின்றனர். சிவபெருமான் தன்னை தானே அர்ச்சித்துக்கொண்ட சிறப்புடையது இந்தக் கோவிலாகும்.

மதுரையில், மத்தியில் இருப்ப தால் ''மத்யபுரி நாயகி'' என போற்றப்படும் அம்பி கையை வேண்டிக் கொள்ள, திருமணம் இனிதே கைகூடுகிறது. அதனால், இந்தத் தாய் மாங்கல்ய வரப் பிரசாதினி எனப்படுகிறாள். இந்த தேவி நின்றருளும் தாமரை பீடத்தில், கல்லால் ஆன ஸ்ரீசக்ரம் உள்ளது.



பொதுவாக செம்பில் ஸ்ரீசக்கரம் வரைந்து பிரதிஷ்டை செய்வதே வழக்கம். இங்கு கல் ஸ்ரீசக்ரம் வித்தியாசமானதாகக் கருதப் படுகிறது. பத்து தளங்களைக் கொண்ட தசதளவில்வம் இத்தல விருட்சம்.

ஊர்ப் பெயரை ஒட்டி இத்தல ஈசன் மதுர நாயகர் என்றும் இறைவி மதுரநாயகி என்றும் வணங்கப்படுகின்றனர். பூலோக கைலாயம் என அழைக்கப்படும் இத்தலம், மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் தென்மேற்கு திசையில் உள் ளது.

எந்தக் கோவிலுக்கு போனாலும் சிவலிங்கத்தின் முன் பகுதியையே நாம் தரிசிப்போம். ஆனால், இந்தக் கோவிலில் மட்டும் லிங்கத்தின் பின்புற தரிசனமும் நமக்கு கிடைக்கிறது. இங்கே சிவன் அம்பாளுடன் மேற்கு நோக்கி அமர்ந்து லிங்க பூஜை செய்கிறார். எனவே, லிங்கத்தின் முன்பகுதி அவர்களை நோக்கி இருக்கிறது. பக்தர்களுக்கு பின்புற தரிசனம் கிடைக்கிறது.

மதுரையை ஆண்ட மலையத்துவஜனின் மகளாக பிறந்த மீனாட்சியை, ஈசன் சுந்தரேஸ்வரராக வந்து மணந்து கொண்டார். பின் பாண் டிய மன்னராக பொறுப்பேற்க தயாரானார். அரச பீடத்தில் அமர்வதற்கு முன்தாக சிவபூஜைசெய்ய வேண்டும் என்பது ஐதீகம். அதன் அடிப்படையில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து பூஜை செய்தார். இதன் அடிப்படையில் இங்கு சிவனே, சிவலிங்கத்தை பூஜிக்கும் அமைப்பில் காட்சி தருகிறார்.

திருமணமாகாதவர்கள் இக்கோயில் அம்மனை வேண்டினால் நல்ல வரன் அமையும் என்பதால் இக் கோயில் அம்மனுக்கு 'மாங்கல்ய வரபிரசாதினி' என்ற பெயருமுண்டு. மதுரையிலுள்ள பஞ்சபூத தலங்களில் இது பூமித் தலமென்பதால் புது கட்டிடம் கட்டத் துவங்குபவர்கள், பிடி மண்ணை எடுத்து வந்து வழிபடுவதுண்டு. தலைமை பதவி கிடைக்கவும், பணி உயர்வு பெறவும் சிவனுக்கு, 'ராஜ உபச்சார அர்ச்சனை' செய்து வேண்டி கொள்கிறார்கள்.


aanmeegamalar.com

# மதுரை திருகூடல்மலையிலிருந்து மீனாட்சி சுந்தரேஸ்வரரை தரிசித்த சித்தர்கள்











மதுரையில் ககபுஜண்டர் முதல் கட்டிக்குளம் மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் அவரைதேடி வடக்கில் இருந்து வந்த சோமப்பா சுவாமி சித்தர் என ஏராளமான சித்தர்கள் முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் கோவில் மிக அருகே உள்ளது.

திருகூடல்மலை, இம்மலை புஜண்டர் மலை எனவும் அழைக் கப்படுகிறது. அடிவாரத்தில் உள்ள ராமலிங்க விலாசத்தில் கட்டிக்குளம் மகாசித்தர் சூட்டு கோல் ஸ்ரீ மாயாண்டி சுவாமி, மலைநடுவே ஸ்ரீசோமப்பா சுவாமி மலை உச்சியில் சித்தர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட தண்டபாணி சுவாமி, அதன் அருகில் குகைகோவிலில் ஸ்ரீ நவநீதபெருமாள் ஸ்ரீ வைகுண்ட பெருமாள் சன்னதிகள் உள்ளது.

மற்றும் மலை பாதையில் மிக பெரிய ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. திருகூடல்மலையில் இருந்து சித்தர்கள் ஒரேநேரத்தில் அன்னை மீனாட்சி அம்மன், யானைமலை யோகநரசிம்மர், அழகர் மலை அழகர் ஆகியோரை ஒரே நேரத்தில் தியாணநிலையில் தரிசித்து உள்ளனர். என பக்தர்கள் கூறிவருகின்றனர்.

இப்போதும் இம்மலை உச்சியில் இருந்து மீனாட்சி அம்மன் கோவில் கோபுரங்கள் மற்றும் யானைமலை, அழகர் மலையை காணலாம்.

இக்கோவிலில் சித்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீநவநீதபெருமாள் ஆண்டு தோறும் ஆடி பவுர்ணமி தினத்தில் திருகூடல்மலையில் இருந்து புறப்பட்டு மதுரை நகரைசுற்றி பல ஊர்களில் சென்று மானாமதுரை வரை பக்தர்களுக்கு எழுந்தருளும் பிரம்மோற்சவ விழா நடைபெறுகிறது.

மேலும், ஆடிமாதம் சூட்டுகோல் ராமலிங்கம் ஸ்வாமி, சூட்டுகோல் மாயண்டி ஸ்வாமி, சோமப்பா ஸ்வாமி குரு பூஜைவிழா சங்கடஹர சதுர்த்தி பூஜை தைபூசம், பிரதோஷ வழிபாடு, ஐப்பசி அன்னாபிஷேகம், கார்த்திகை சோமவார விழா, வைகுண்ட ஏகாதசி போன்ற விழா காலங்களில் சிறப்பு யாகம் நடைபெறுகிறது.


தினமும் மதியம் சுவைமிகு அன்னதானம் நடைபெறுகிறது. மதுரை மட்டும்மின்றி தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமிழகத்தில் பல ஊர்களில் இருந்து வந்து சித்தர்கள் தேடிவந்த திருகூடல்மலை ஏறிவந்து சித்தர்கள் அருள்ஆசியும், சித்தர்கள் தவமிருநத குகைகளில் தியானம் செய்து வழிபட்டு செல்கின்றனர். வரும் அக்டோபர் 7 மற்றும் 8ந் தேதியில் கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் 94வது குருபூஜை விழா நடைபெறுகிறது.

திருகூடல்மலை பற்றிய ஆலய தகவல் பற்றி அறிய 9842124841.


D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்
9842409829/9791944001

பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில்,
மானாமதுரை 630 606




ஸ்ரீ லெட்சுமி
ஆட்டோ ஸ்பேர்ஸ்
அனைத்து டூவீலர் வாகனங்களுக்கும் உதிரி பாகங்கள்
குறைந்த விலையில் கிடைக்கும் சேல்ஸ் & சர்வீஸ்
சாஸ்தா நகர், சிவகங்கை மெயின்ரோடு மானாமதுரை-630 666
தாகியார்நகர், மானாமதுரை
96989 55068 /99521 24373


aanmeegamalar.com

# வேண்டிய வரங்களை தந்து பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றி தரும் மானம்பாக்கி தர்மமுனீஸ்வரர்









சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் மானம் பாக்கி தெற்கு எல்லையில் அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ தர்ம முனீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. அழகிய கலைநயம்மிக்க வேலைபாடுகளுடன் அமைக்க பட்ட தர்மமுனீஸ்வரர் கோவிலில் திருபணிகள் முடிந்து 2023–ஆம் ஆண்டு ஜீன் 1ந்தேதி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைதொடர்ந்து இந்த ஆண்டு களரி விழா நடைபெறுகிறது.

பாரத புண்ணிய பூமிலே நில வளமும், நீர்வளமும், தர்ம அறநெறியும், கொடை உள்ளமும், ஆன்மீகமும் ஓங்கிநிற்கும் புண்ணிய பூமியாம் மானம்பாக்கி தெற்கு எல்லையில் அருள்பாலித்து வரும் அகிலாண்ட கோடி பிரம்மாண்டநாயகர் அருள்மிகு ஸ்ரீ தர்மமுனீஸ்வரர், ஸ்ரீ மஹாகணபதி, ஸ்ரீ புத்தடி வேங்கை, ஸ்ரீ பெரிய கருப்பணசாமி, ஸ்ரீ சமயணசாமி, ஸ்ரீ பொன்ராக்கச்சி, ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ சிவசூரியன், ஸ்ரீ பொன்னுச்சாமி, ஸ்ரீ செங்கமலம் போன்ற தெய்வங்கள் தனிசன்னதியில் அருள்பாலிக்கும் இக்கோவிலில் வரும் மே 23 ந்தேதி வைகாசி 9–ம் நாள் காலை வருஷாபிஷேக விழாவும்

அன்று இரவு களரிவிழா விற்க்கு காப்புகட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. வரும் மே 30ந்தேதி வைகாசி 16ம்நாள் களரிவிழா சிறப்பு யாகம், அன்னதானம், பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்துதல் நிகழ்ச்சிகள் நடை பெறுகிறது. கடந்த 20 வருடங்களாக இக்கோவிலில் திருப்பணிவேலைகளை

இறை ஆசியோடு ஆஹம ஸ்தபதிகள் உடவயல் செந்தில்சிற்பி மற்றும் உடவயல் கண்ணதாசன் சிற்பி ஆர்வமுடன் செய்துவருகின்றனர்.

இன்பமே சூழ்க ! எல்லோரும் வாழ்க அனைவரும் வருக ! இறையருள் பெறுக !

உங்களுக்கு ஸ்ரீ தர்மமுனிஸ்வரன் துணை இருந்தால் இந்த உலகமே எதிர்த்தாலும் அதில் நீங்கள் வெற்றி பெற லாம். என வருஷாபிஷேக விழா களரிவிழா ஏற்பாடுகளை

ஸ்ரீதர்மமுனிஸ்வரர் சுவாமி கும்பிடும் பங்காளிகள், ஸ்ரீதர்மமுனிஸ்வரர் பொன்னடி மக்கள் மற்றும் பக்த கோடி பொதுமக்கள் செய்து வருகின்றனர். ஆலய தொடர்புக்கு 9443191106









aanmeegamalar.com

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம்
மானம்பாக்கி தெற்கு எல்லையில் அருள்பாலித்துவரும்

# அருள்மிகு
# ஸ்ரீதர்ம முனீஸ்வரர் திருக்கோவில்
## வருஷாபிஷேகம் களரி விழா



**23.05.2025**
வைகாசி 9 வெள்ளிகிழமை காலை
வருஷாபிஷேகவிழா
இரவு களரி விழா காப்பு கட்டுதல்

**30.05.2025**
வைகாசி 16 வெள்ளிகிழமை களரி
விழா, பூஜை, அன்னதானம் நடைபெறும்



பக்த கோடிகள் அனைவரும் வருக வருக
மானம்பாக்கி தெற்கு எல்லை ஸ்ரீதர்ம முனீஸ்வரர் அருள்ஆசி பெறுக

இப்படிக்கு
ஸ்ரீதர்மமுனீஸ்வரர் சுவாமி கும்பிடும் பங்காளிகள்,
ஸ்ரீதர்மமுனீஸ்வரர் பொன்னடிமக்கள் மற்றும் பக்தகோடிகள்

**தொடர்புகொள்ளவும் 9443191106**

aanmeegamalar.com

# மதுரை அருகே இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32அறப் பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதி யாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவபக்தர்களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந்துள்ளார்.

அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரண மாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ் சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்தித்தார். இந்தக் காலகதியைவெல்ல ஒரு வழியையும் கண்ட றிந்து வைத்தி ருந்தார்.



தன் குடிசையைப் புதுப்பிக்கும்போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்து விட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லா விட் டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புற வில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச் சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரி சியாகக் கீழ் விழும்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற் கிணங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறு வேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச் சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங் கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண் ணங்களை அப்படியே மறையச் செய்தது. உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஓய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஒரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட் களை மட்டுமல்ல, கோள்களையும் மாற்றும் வல்லமை அவர் களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்டவர் களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குரு பெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது. பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடை பெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.


## இடைகாடார் சித்தர் ஆன்மிக அன்னதான குழு

மாதந்தோறும் பௌர்ணமி அன்றும் காலை 10 மணிக்கு உலக மக்கள் யாவரும் நலமாக வாழ ஹோம பூஜை, அபிஷேகம் மற்றும் அன்னதானமும் சிறப்பாக நடைபெறும், பக்தர்கள் இதில் கலந்து கொண்டு பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

பௌர்ணமி விழாவில் நீங்களும் பங்கேற்க

**9751555985 / 9751936853**

– இப்படிக்கு, இடைகாடார் சித்தர் ஆன்மிக அன்னதான குழு இடைக்காட்டூர்



மகான்
இடைக்காடர்
சித்தர் பீடம்
மகாத்மா
கருணை இல்ல
வளாகம் ராயல்
சிட்டி அமராவதி
பாளையம்
திருப்பூர்.



**9952705871**



# ஆஞ்சநேயருக்கு மகுடம் சூட்டிய ராமன்

ராமாயண காலத்தில் ராமபிரான் இலங்கை சென்று போரிட வானர படை களை அனுமன் தலைமையில் தயார் செய்து அனுப்பிய போது பிருந்தாவன காட்டில் வந்த வானர படைகள் அங்கு உள்ள பழங்கள் மற்றும் இயற்கை உணவுகளை உண்டு மயங்கின.

இலங்கை சென்று போரிடுவதை மறந்து காட்டில் மயங்கி இருந்த போது அங்கு வந்த ராமபிரான் வான படைகளுக்கு எதற்காக நாம் வந்தோமோ அதை மறக்க கூடாது.

செய்கின்ற பணிகளை கவனமுடன் பல கஷ்டங்கள் வந்தாலும் கடமையை முடித்து காட்ட வேண்டும் என உபதேசம் செய்தார்.

ராமரின் உபதேசத்தை வானர படைகள் தலைவணங்கி ஏற்று கொண்டு ஒற்றுமையுடன் அனுமன் தலைமையில் இலங்கை செல்ல கடலில் பாலம் அமைத்து சென்று போரில் வென்று சீதையயை மீட்டு மீண்டும் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறகூடாது.

என அனுமனுக்கு ஆசி வழங்கி மகுடம் சூட்டியதாக கூறப்படுகிறது. அதன் நினைவாக மாவலி மன்னர் வீர அழகர் கோவிலை மானா மதுரை வைகைஆற்றில் கட்டி அதில் வீர ஆஞ்சநேயர் தனிசன்னதியும் அமைத்தார்.

வானர படைகள் இங்கு வீரம்பெற்றதால் வானர வீர மதுரையாக இருந்து பின் மருவி மானாமதுரை என அழைக்கபடுகிறது. ராமர், அனுமார் பாதம் பட்ட பகுதியாக மானாமதுரை உள்ளது. வானர படைகள் பழங்கள் உண்டு மயங்கிய பிருந்தாவனம் தற்போது அதே பெயரில் பிருந்தாவன தெருவாக தற்போது உள்ளது.

வானரர்கள் இங்கு வீரபெற்றதால் வீர ஆஞ்சநேயர், ஜெயவீர ஆஞ்சநேயர் என மானாமதுரை ரயில் நலையத்தில் தொடங்கி வைகை கரையோரம் வரை ஏராள மான அனுமன் கோவிலாக மானாமதுரை யில் இப்போது கணலாம்.

ராமர் சென்ற காலடி முழுவதும் இலங்கை வரை இப்போதும் ராமர் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ளது. மானாமதுரையில் வீர ஆஞ்சநேயராகவும், குறிச்சியில் காசிஅனுமராகவும் பக்தர்களால் வணங்கபட்டு வருகிறது.







aanmeegamalar.com

# மதுரையில் 18 சித்தர்கள் கோவில்







கோவில் மாநகரம் என அழைக்கப்படும் மதுரையில் ஆயிரக்கணக்கான பிரசித்தி பெற்ற கோவில்கள் உள்ளது.

மீனாட்சி பட்டணம் என அழைக்கப் படும் மதுரையில் 18 சித்தர்களுக்கு தனி கோவில் உள்ளது.

மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள கீழடியில் 18 சித்தர் கள் கோவில் உள்ளது. இக் கோவில் சிறப்பு பற்றி கோவிலில் உள்ள சிவனடி யார்ஞானபிரகாசம் சுவாமி கூறியதாவது

18 சித்தர்கள் திருக்கோயில் அமைந் துள்ள இந்த ஊர் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள வாணிப நகரமான பழைய மதுரையாகும் முன்னால் குந்திதேவி சதுர்வேத மங்கலம் என்றும் பின்பு கீழடி என்றழைக்கப்படுகிறது.




இவ்வூரில் இக்கோவில் அமைய குந்திதேவி மற்றும் பஞ் சபாண்டவர்களும் எண்ணிலடங்கா சித்தர்களும் வாழ்ந்தும் வந்தும் சென்றுள்ளார்கள்.

இக்கோவிலின் மூலவர் அகத்தியர் மற்றும் நடராஜர் 6வது சபையாக காட்சியளிக்கிறார். அகத்தியசபை எனவும் பக்தர்கள் கூறி வழிபாடு செய்கின்றனர்.

ஊரின் பூராண பெயர்கள்

பெருமணலூர், குந்திதேவி சதுர் வேதமங்கலம், கிரீடபுரம், கீழடி எனவும் இப்போது அழைக்கபடுகிறது.

தல விருட்சம் மருதம் மரம் உள்ளது.

சிறப்பு: உலகத்தில் 18சித்தர்களுக்கும் தனித்தனி கருவறையாக ஒரே இடத்தில் சித்தர்களுக்கென்று தனிக்கோவிலாக அமைய பெற்றது சிறப்பாகும். இங்கு பக்தர்களே 18 சித்தர்களுக்கு பூஜை செய்து வழிபாடு செய்யலாம்.

கோவில் கோபுரத்தில் அனைத்து மகான்கள் சிலைகள் சுதை வடிவில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சித்தர்களின் மாதந்தோறும் ஜென்ம நட்சதிர வழிபாடு பூஜை ஆண்டு தோறும் குருபூஜை நடைபெறுகிறது.

இக்கோவிலில் தண்ணீரில் மிதக்கும் அதிசய கல் இப்போது உள்ளது.

18 சித்தர்கள் கோவில் அருகே பஞ்ச பாண்டவர்கள் வழி பாடு செய்த அர்சணேஸ்வரேர் சிவன் கோவில் உள்ளது. அங்கு பக்தர்கள் வழிபாடு செய்யலாம். 18 சித்தர்கள் கோவில் கீழடி அருங்காட்சியகம் செல்லும் வழியில் உள்ளது.

ஆலய தொடர்புக்கு 9842179533




அகத்தியா
பஞ்சகவ்ய விளக்கு

ஒரு கோமாதாவின் மூலம்
கிடைக்கப்படும் மூலப்பொருட்களைக்
கொண்டு தயாரிக்கப்படுகிறது
(100 இயற்கையானது,
வேதி பொருட்கள் கலக்காதது)



பஞ்சகவ்ய - பஞ்சபூத சக்தி
சாணம் - நிலம்
கோமியம் - நீர்
தயிர் - காற்று
பால் - ஆகாயம்
நெய் - நெருப்பு

பஞ்சகவ்ய விளக்கு
மூலிகை நெய் விளக்கு
மூலிகை வாசனை தூபம்
அக்னிஹோத்திர வில்லை
இறைவன் வடிவில் விதைப்பந்து

பஞ்சகவ்யம் பஞ்சபூதங்களை
சமநிலைப்படுத்தும்



ஒரு மண்டலம்
(48 நாட்கள்)
இவ்விளக்கை
ஏற்றினால்
நினைத்தவை நடக்கும்.

தொடர்புக்கு: 18 சித்தர்கள் திருக்கோயில் கீழடி
செல்: 9842179533


aanmeegamalar.com

# கடிதம் தரும் பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் அனுமன்







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சுந்தரபுரம் தெருவில் உள்ள சுந்தரவிநாயகர் கோவிலில் மூல நட்சத்திரத்தன்று அனுமன் உருவப்படம் வைக்கப்பட்டு வடைமாலை சாத்தப்பட்டு பூஜைகள் நடைபெறும்.

பூஜை தொடங்கும் நேரமான மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை மாணவ–மாணவிகள், ஆண், பெண், என ஏராளமான பக்தர்கள் கடிதம் எழுதிய கவர் தரு கின்றனர். அந்த கடிதங்களை அனுமன் உருவப்படத் திற்கு முன்பு வைத்து பூஜை செய்து அங்கே வைத்து விடுகின்றனர்.

கடிதம் கொடுத்த பக்தர்கள் அடுத்த முறை வந்து கடிதத்தில் எழுதிய கோரிக்கை நிறைவேறிவிட்டது என்று கூறி பூஜை செய்கின்றனர். கோரிக்கை நிறைவேறிய கடிதங்கள் உருவப்படத்தில் இருந்து எடுக்கப்பட்டு தனி பையில் சேகரிக்கப்பட்டு கோவிலில் வைக்கப் பட்டுள்ளது.

இந்த கோவிலில் சங்கடஹர சதுர்த்தி, பவுர்ணமி பூஜை மூல நட்சத்திரம் உள்ளிட்ட விஷேசங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மூல நட்சத்திரத்தன்று அனுமனிடம் கடிதம் கொடுக்க ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

இது பற்றி கோவிலை பராமரித்து வரும் முன்னாள் ராணுவ வீரர், பிரசாத், தமிழரசி தம்பதியினர் கூறும்போது,


மூலம் நட்சத்திரத்தன்று அனுமனுக்கு பலர் கடிதம் தருகின்றனர். சில நாட்களில் கோரிக்கை நிறைவேறி விட்டது என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். அனுமன் உருவப்படத்திற்கு முன்பு பூஜை செய்யப்படுகிறது.

கடிதங்கள் பிரிக்கப்படுவது கிடையாது. அனுப்புனர் கொடுக்கும் முகவரியும், பெறுநர் பகுதியில் வீர அனுமான், சுந்தரவிநாயகர் திருக்கோவில் சுந்தரபுரம் மானாமதுரை என்றுதான் கொடுப்பார்கள்.

அதில் நாங்கள் செந்தூரம் வைத்து அனுமன் உருவப் படத்திற்கு முன்வைத்து விடுவோம்.

இப்படி வேண்டுதல் மூலம் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு. திருமணம், நோய்குணமாகுதல் போன்ற பல கோரிக்கைகள் நிறைவேறியுள்ளன என கூறினர் தற்போது கோவில் கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் நடைபெற உள்ளது பக்தர்கள் நிதி உதவியாகவோ பொருளுதவியாகவோ தரலாம். தொடர்புக்கு 94435 02417


அருள்மிகு
ஸ்ரீசுந்தர விநாயகர் ஆலயம்
சுந்தரபுர அக்ரஹாரம்
மானாமதுரை





21ம் ஆண்டு வருஷாபிஷேக விழா
நாள் 21.5.2025 புதன்கிழமை,
காலை 9.00 மணிக்கு நவகலச
அபிஷேகம், சிறப்பு ஹோமம் நடைபெறும்.

மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு
அபிஷேகம் பூஜை, மூலம் நட்சத்திரநாளில்
ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு சிறப்பு பூஜை.

பக்தர்கள் சுந்தரவிநாயகரை வழிபட்டு
வாழ்வில் வளம்பெற அன்புடன் அழைக்கிறோம்.



S.இராஜேந்திர பிரசாத் - தமிழரசி
நிர்வாகி மற்றும் பக்தர்கள், விழா குழுவினர்,
மானாமதுரை. போன் 94435 02417



aanmeegamalar.com



# ஆனந்த வாழ்வு தரும் ஆனந்தவல்லி அம்மன் சோமநாதர் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை ஆற்றுக்கரையில் அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீஆனந்த வல்லிசோமநாத சுவாமி திருக்கோயில் உள்ளது இக் கோவில் ஆதி காலத்தில் வில்வ வனகாட்டில் இருந்ததால் வில்வ வன ஷேத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்து உள்ளது சந்திர பகவான் தனக்கு தட்சண் இட்ட சாபத்தால் தொழுநோய் ஏற்பட்டு அது நீங்க கோவில் முன் உள்ள சந்திர புன்கரணி தீர்த்தத்தால் நீராடி வில்வ வனகாட்டில் இருந்த அம்மனையும் சிவபெருமானை வணங்கி தொழுநோய் நீங்கியதாகவும் நோய்கள் தீர்ந்து ஆனந்தம் அடைந்ததால் ஆனந்த வல்லியாகவும் சோமநாதராகவும் ஒரு மண்டலம் வணங்கி ஆனந்தம் அடைந்தான் என கூறப்படுகிறது.

பெருங்குளமாக இருந்த புஷ்கரணி தற்போது ஒரு சிறிய கிணறாக உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் ஆட்சி காலத்தில் பின் வைகை ஆறு இங்கு வந்துள்ளது அதேபோல் மலிக் காபூர் படையெடுப்பின் போது நாயக்க வம்சத்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை இங்கு உள்ள வனகாட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து பின் மதுரை சென்றதாகவும் கூறப்படுகிறது.



ராமயன காலத்தில் ராமர் தனது வானர படைகளுடன் இங்கு தங்கி ஆனந்தவல்லி அம்மனையும் சுயம்பு லிங்கமாக உள்ள சோமநாதரை தரிசித்து ராவணனை வென்றதாகவும் கூறப்படுகிறது. மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீசதாசிவ பிரம் மேந்திராள் ஒரே நேரத்தில் மானா மதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் கரூர் மாவட்டம் நெருர் மற்றும் ஓம்கார் காசி கராச்சி ஆகிய இடங்களில் ஓர் ஜோதி வடிவில் ஜுவசமாதி அடைந்ததாக கூறப்படுகிறது .

இங்கு உள்ள ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் சன்னதி முன்பு

aanmeegamalar.com

மனம் முருகி வேண்டும் போது தீராத நோய்களும் நீங்குவதாக நம்பப்படுகிறது.

மானாமதுரையில் ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் இந்தியாவின் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் மூன்று நாள் இங்கு தங்கி ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் இசை ஆராதனை நடத்தி வழிப்பாட்டடும் செல்கின்றனர்.

மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய சிறப்புகளுடன் துன்பம் நீங்கி நோய்கள் போக்கி ஆனந்த தலமாகவும் இம்மை பயன ளிக்கும் மோகன சுந்தர தலமாகவும் உள்ளது.



பாஞ்சால மன்னர்ஸ்தூல கர்ணன் வில்வக் காட்டை அழித்து பட்டணம் உருவாக்கி வெள்ளை நிறத்தோடு கூடிய சுயம்பு மூர்த்தியாம் சிவலிங்கத்தை வணங்கி ஆலயம் கட்டியதாக கூறப்படுகிறது. ஆனந்தவல்லி அம்மன் கோபுரம் முன்பு நின்ற நிலையில் உள்ள விநாயகர் தனி சன்னதியும் சூரியன் சந்திரன் கால பைரவர் வள்ளி தெய்வானை சுப்பிரமணிய சுவாமி சன்னதிகளும் உள்ளது வில்வகாட்டில் இருந்ததால் தல விருட்ச மரம் வில்வத்துடன் கூடிய சிவ தலமாக உள்ளது.

ஆண்டு தோறும்மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயில் எப்படி திருவிழா நடைபெறுகிறதோ அதேபோல் இங்கு சித்திரை திருவிழா ஆடித்தபசு நவராத்திரி சதாசிவபேந்திராள் இசை ஆராதனை போன்ற விழாக் கள் நடைபெறுகிறது.

மதுரை மீனாட்சி சுந்த ரேஸ்வரரை பாதுகாத்த வில்வ காடாகவும் தொழுநோய் பாதிக்கப்பட்ட சந்திரபகவான் குணமடைந்தாலும் அகத்தியர் மாணிக்கவாசகர்போன்றோர் வணங்கி ஆனந்தம் அடைந் தாலும் வானர படைகளுக்கு பசி நீங்கியதாலும் ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் ஜீவசமாதி அடைந்து முக்தி பெற்றாலும் அற்புதங்கள் நிறைந்த கோவிலாக ஆனந்தவல்லி சோமநாதசுவாமி திருக்கோயில் உள்ளது. மதுரை இராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகள் தினமும் இங்கு வந்து வழிபட்டு செல் கின்றனர் மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.












அருள்மிகு ஸ்ரீஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவில்
ஸ்ரீ வீர அழகர் திருக்கோவில் சித்திரை பெருந்திருவிழா
காண வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கும்

சிற்பகலா ரத்னா, சிற்ப செம்மல்
தெளிச்சாத்தநல்லூர் டாக்டர்
ஸ்தபதி A.சண்முகம்,
ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்,
61/1, செட்டிய தெரு, மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்
கோவில் திருப்பணி வேலைகளுக்கு அணுகவும்
9443466481 / 8778732600




aanmeegamalar.com











# வைகையில் இறங்கி பக்தர்களுக்கு வரம் தரும் வீர அழகர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வீர அழகர் கோவில் உள்ளது.

வைகை ஆற்று தென்கிழக்கில் உள்ள இக்கோவிலில் ஸ்ரீசுந்தரராஜபெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இங்கு ராமபிரானால் மகுடம் சூட்டப்பட்ட வீர ஆஞ்சநேயர், தாயார்சன்னதியும் உள்ளது.

கோபுரம் முன்பு பதினெட்டுபடி கருப்பன், ராக்கச்சி அம்மன் தனிகோவில் உள்ளது. வீரஅழகர் ஆற்றில் இறங்குவதற்கு முன்பு பூபல்லாக்கில் கள்ள ழகர் திருக்கோலத்துடன் சென்று இறங்கும்

முன்பு அலங்கார பிரியரான சுந்தரராஜ பெருமாளுக்கு தியாக விநோத பெருமாள் கோவிலில் சிறப்பு அலங்காரம் செய்யப்படும்.

வெள்ளை குதிரை வாகனத்தை அலங் கரித்து வீர அழகருக்கு வெண் மஞ்சள் பட்டு உடுத்திபச்சை வஸ்திரம் சாத்தி வேல் கம்புடன் கம்பீரமாக எழுந்தருளி வைகை ஆற்றில் இறங்குவார். ஆண்டுதோறும் நல்ல மழை பெய்து நல்ல விளைச் சலை தருவதற்கும் மக்களின் வாழ்வு மங்களகரமாக இருக்கும் வகையில் வீரஅழகர் வெண் மஞ்சள் பட்டு பச்சை வஸ்திரம் உடுத்தி வீதி உலா வந்து வெற்றி தரும் வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்குகிறார் என பக்தர்களால் நம்பப்பட்டு வருகிறது.

வைகை ஆற்று கரையில் இருபுறங்களிலும் ஸ்ரீஆனந்தவல்லி சோமநாத சுவாமி கோவில் வீரஅழகர் கோவில், அப்பன் பெருமாள் கோவில் இங்கு மட்டும் உள்ளது. மானாமதுரையில் ஆண்டு தோறும் நடைபெறும் பெரிய திருவிழாவாக சித்திரை திருவிழா மட்டுமே உள்ளது. ஆற்றில் இறங்கிய மறுநாள் இரவு மீண்டும் ஆற்றுக்குள் நிலாசோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் வீர அழகரை தரிசித்து வீட்டில் இருந்து சமைத்து எடுத்து வரபட்ட உணவு வகைகளை பக்தர்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக பௌர்ணமி நிலவு ஒளியில் சாப்பிடுவார்கள். தமிழகத்தில் இங்கு மட்டும் வீர அழகருடன் பக்தர்கள் உணவு அருந்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.




அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை

M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்

A.T.T.லாட்ஜ்

அகிலா காம்ப்ளக்ஸ்





அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்

பைபாஸ்ரோடு, மானாமதுரை

மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்



L.சுரேஷ்

S.அண்ணாமலை

செல்: 98424 68215 / 73737 68215

# அருள்மிகு ஸ்ரீ வீரஅழகர், மானாமதுரை



aanmeegamalar.com

மானாமதுரையில் ஹோட்டல்

**ஸ்ரீ பழனிஸ்**

சைவம்

அனைத்து சைவ உணவு வகைகளும் மற்றும்
சைனீஸ், வடஇந்திய உணவு வகைகளும்
தங்களது இல்ல விழாக்களுக்கு
ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்









மகிழ்ச்சியுடன் வாருங்கள்
மனநிறைவோடு செல்லுங்கள்
அன்புடன் அழைக்கும்
செல்: 8098097273
மெயின் ரோடு மானாமதுரை

aanmeegamalar.com

# SCHOOL OF ALLIED HEALTH SCIENCES

**Vinayaka Mission's Research Foundation - Deemed To Be University**

(Declared Under Section 3 of the UGC Act, 1956) (Accredited by NAAC 'A' Grade)

https://fahs.ac.in/apply

The Allied Health Science Institute to have....
- [illegible]
- AERB Approved UG, PG & Diploma in Radiography Courses
- [illegible]

## NO NEET REQUIRED



### COURSES OFFERED @ SAHS

## UG Courses

**3 Years + 1 year Internship** | **Eligibility : +2 PCBM, PCBZ, PCB**

- B.Sc Anaesthesia Technology
- B.Sc Renal Dialysis Technology
- B.Sc Operation Theatre Technology
- B.Sc Trauma Care Management
- B.Sc Medical Lab Technology
- B.Sc Radiology and Imaging Technology
- B.Sc Physician Assistant
- B.Sc Cardiac Technology
- B.Sc Perfusion Technology
- B.Sc Neuroscience Technology

24 YEARS OF Excellence in Education

**Eligibility : +2 PCBM/PCBZ/PCB/PCMCS**
- B.Optometry
- B.Sc Forensic Science Technology

## Master Program

**2 Years**

- M.Sc Renal Dialysis Technology
- M.Sc Physician Assistant

  Eligibility : B.Sc AHS / B.Sc Nursing
- Master of Optometry

  Eligibility : B.Optometry
- M.Sc Cardiac Cath & Interventional Technology
- Master of Public Health

  Eligibility : Bachelor Degree in MBBS / Ayush / Pharmacy / Physiotherapy / Occupational Therapy / Dentistry / Nursing / Veterinary Sciences / Allied Health Sciences / Life Sciences / B.Sc Botany & Zoology
- M.Sc Perfusion Technology

  Eligibility : B.Sc in Perfusion Technology (3 Year + 1 Year Internship) / B.Sc Cardiac vascular Technology
- M.Sc Echocardiography
- M.Sc Anaesthesia Technology
- M.Sc Neuroscience Technology
- M.Sc Forensic Science Technology
- M.Sc Radiology & Imaging Technology

  Eligibility : B.Sc AHS
- M.Sc Medical Lab Technology

  Eligibility : Bachelor Degree in MLT / Biochemistry / Microbiology / Biotechnology / B.Sc. Chemistry (with ancillary subject of Biochemistry and Microbiology) Genetics degree
- M.Sc Trauma Care Management

  Eligibility : B.Sc Trauma Care Management / Emergency and Trauma Care Technology / BPT / B.Sc Nursing

## Diploma Courses

**2 Years** | **Eligibility : 10th*/+2 with Science Stream**

- Diploma in Radiology & Imaging Technology
- Diploma in Medical Lab Technology
- Diploma in Operation Theatre & Anaesthesia Technology*

| Salem | Puducherry | Chennai |
|---|---|---|
| VIMS Hospital Campus | Aarupadai Veedu Medical College & Hospital Campus | Aarupadai Veedu Institute of Technology Campus |
| Mob : 7094450128<br>9159999572 | Mob : 9787136328<br>9750980225 | Mob : 8124648205<br>9159999572 |

## TOLL FREE : 18003093332

aanmeegamalar.com


# ADMISSION OPEN 2025-26

## School of Rehabilitation and Behavioral Sciences Puducherry

SRBS

World Health Organization · World Hearing Forum · National Digital Library of India



To apply online

### Programmes Offered

**Undergraduate Programme**

- Bachelor in Audiology and Speech-Language Pathology

**Postgraduate Programme**

- Master of Science (Audiology)
- Master of Science (Speech-Language Pathology)
- Master of Science (Clinical Psychology)
- Master of Philosophy (Clinical Psychology)
- Post Graduate Diploma in Early Intervention

www.daslpvmrf.edu.in

## VINAYAKA MISSION'S COLLEGE OF NURSING, PUDUCHERRY

(An Constituent College of Vinayaka Mission's Research Foundation)

VMCON

Scan here for Website

ISO · National Digital Library of India · NPTEL · Swayam · WASH

### Programmes Offered

**Undergraduate Programme**

- B.Sc. (Nursing) - Bachelor of Science in Nursing
- P.B.B.Sc. (Nursing) - Post Basic Bachelor of Science in Nursing

**Postgraduate Programme**

- M.Sc. (Nursing) - Master of Science in Nursing



www.vmcnpdy.edu.in

## School of Physiotherapy

VMRF

ISO · National Digital Library of India · NPTEL · Swayam · WASH



Scan here for Website

### Programmes Offered

**Undergraduate Programme**

- B.P.T. - Bachelor of Physiotherapy

**Postgraduate Programme**

- M.P.T. - Musculoskeletal and Sports Physiotherapy
- M.P.T. - Neurological Physiotherapy
- M.P.T. - Cardio- Respiratory Physiotherapy
- M.P.T. - Pediatric Physiotherapy
- M.P.T. - Obstetrics and Gynaecological Physiotherapy
- M.P.T. - Community Physiotherapy

www.sptvmrf.edu.in

## VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION

Deemed to be University under section 3 of the UGC Act 1956

VISION · WISDOM · UNITY

Accredited with 'A' Grade by NAAC

**Admission office :** Vinayaka Mission's Research Foundation, Aarupadai Veedu Medical College and Hospital Campus Pondy Cuddalore Main road Kirumampakkam, Puducherry - 607403

nirf NATIONAL INSTITUTIONAL RANKING FRAMEWORK · AISHE ALL INDIA SURVEY ON HIGHER EDUCATION · NABH

admission.pondy@avmc.edu.in

+91 96290 70444